விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 114 வள்ளுவர் ஆண்டு 2055 பங்குனி 29 வியாழக்கிழமை (11.04.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829


கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## புத்தாண்டை முன்னிட்டு ஏப்ரல் 15 பொது விடுமுறை

(கொழும்பு)


ஏப்ரல் 15ஆம் திகதி திங்கட்கிழமை பொது விடுமுறையாக பொது நிர்வாக அமைச்சினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ், சிங்களப்புத்தாண்டை முன்னிட்டே எதிர்வரும் திங்கட்கிழமை பொது விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் பிரதீப் யசரத்ன இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார். (ம-7,10)

## இலங்கையின் தேவையைப் பூர்த்தி செய்ய இந்தியா தொடர்ந்து ஆதரவு

### இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா



(கொழும்பு)

இலங்கையின்தேவைகளை பூர்த்தி செய்வதற்கும் அபிவிருத்தி நடவடிக்கைகளை ஆதரவளிப்பதற்கும் இந்தியா தொடர்ந்தும் ஆதரவளிக்குமென இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா உறுதியளித்துள்ளார்.

அதேநேரம், இலங்கையின் பாதுகாப்புப் படையினரின் தேவைகளை

15

# இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்குவதை மீளாய்க

## சர்வதேசத்திடம் மன்னிப்புச் சபை கோரிக்கை

(கொழும்பு)

**இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்குவதை சர்வதேச சமூகம் மீளாய்வு செய்ய வேண்டும் என சர்வதேச மன்னிப்புச் சபை சர்வதேசத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.**

AMNESTY INTERNATIONAL

இலங்கையில் அமைதி வழியில் நடத்தப்படும் போராட்டங்களை நசுக்குவதை அரசாங்கம் உடனடியாக நிறுத்த வேண்டும் என சர்வதேச மன்னிப்புச் சபை வலியுறுத்தியுள்ளது.

2022 மார்ச் முதல் 2023 ஜூன் வரை இலங்கையில் நடைபெற்ற 30 போராட்டங்களில், போராட்டக்காரர்களுக்கு எதிராக பாதுகாப்புப் படையினர் அதிக பலத்தை பிரயோகித்ததாக சர்வதேச மன்னிப்புச் சபையின் புதிய அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் அரசாங்கம் உரிய விசாரணைகளை

15

## யாழில் வன்முறை கும்பல் அட்டகாசம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பொலிஸ் பிரிவில் வீடொன்றினுள் புகுந்த வன்முறை கும்பலொன்றினால் வாகனங்கள் சேதப்படுத்தப்பட்

15

## 2025இல் வாகன இறக்குமதிக்கு சாத்தியம்

(கொழும்பு)

நாட்டில் தற்போது நடைமுறையில் உள்ள வேலைத்திட்டத்தை சீர்குலைக்காமல் பேணினால் 2025ஆம் ஆண்டு வாகன இறக்குமதியை ஆரம்பிக்க வாய்ப்பு

15

### யாழ்.போதனாவில்

## அனைத்து வகையான குருதிக்கும் தட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)


யாழ்.போதனா வைத்திய சாலையில் அனைத்து வகையான குருதிக்கும் தட்டுப்பாடு நிலவுவதாக யாழ்.போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் எஸ்.யமுனானந்தா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பில்,

15

## பெரமுனவை பலப்படுத்தும் வேலைத்திட்டம் ஆரம்பம்

### நாமல் எம்.பி தெரிவிப்பு



(கொழும்பு)

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவை கீழ்மட்டத்திலிருந்து பலப்படுத்தும் புதிய வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ

15

## வரிச்சுமையை மக்கள் தாங்கியதால் அரசின் வருமானத்தை அதிகரிக்க முடிந்தது

### ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



(கொழும்பு)

வரிச்சுமையை பொதுமக்கள் தாங்கிக் கொண்டதனாலேயே பணம் அச்சடிக்காமலும் அரசாங்கத்தின் வருமானத்தை அதிகரிக்க முடிந்தது.

இதன் காரணமாகவே இந்த வருடம் அரச ஊழியர்களுக்கான சம்பளத்தையும் அதிகரிக்க முடிந்தது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு முகத்துவாரத்தில் நேற்று

04

## தேர்தலைப் பிற்போட அரசாங்கம் முயற்சி

### ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலையும் பொதுத் தேர்தலையும் பிற்போடுவதற்கே அரசாங்கம் முயற்சிப்பதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி குற்றம் சுமத்தியுள்ளார்.

கொழும்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார நெருக்கடியிலிருந்து ரணிலே மக்களை மீட்டெடுத்தார்

## அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ

(கொழும்பு)

பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டு மக்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வாழவைத்துள்ளார் என சுற்றுலா மற்றும் காணி, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது" முன்னாள் ஜனாதிபதி கோட்டாபயவின் சவாலை ரணில் அன்று ஏற்றுக்கொண்டார்.

பாராளுமன்றத்தில் தனி ஆசனத்தை பெற்ற ரணில் விக்கிரமசிங்க அந்த சவாலை ஏற்று மக்களை வாழவைத்தார்.

கடந்த 23 மாதங்களில் நாட்டை முந்தைய பொருளாதார நிலைக்கு கொண்டு வர அவரால் முடிந்தது.

பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் சவாலை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஏற்றுக் கொள்ளவில்லையென்றால்

இன்று நாடு எந்த நிலையில் இருந்திருக்கும் என்று கற்பனை செய்து பாருங்கள்.

பொருளாதாரத்தை கட்டியெழுப்புவது தொடர்பில் இன்று விவாதத்திற்கு அழைப்பு விடுக்கும் எதிர்க் கட்சியினர் ஏன் அன்று அந்த சவாலை ஏற்கவில்லை என்று நான் கேள்வி கேட்கின்றேன்.

அந்தக் குழுவினருக்கு பொருளாதாரக் கோட்பாடு மட்டுமே தெரியும். அவர்களுக்கு நடைமுறை பொருளாதாரம் தெரியாது.

அரச ஊழியர்களின் சம்பளத்தை 10,000 ரூபாவினால் அதிகரிக்கவும் ஜனாதிபதி ஏற்பாடு செய்தார். தொழிலாளர்களுக்காக பேசும் எந்த கட்சியும் இவ்வளவு சம்பள உயர்வை எவருக்கும் வழங்கவில்லை இவ்வாறு ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். (ம-7,10)

# வயலினே வாழ்வான இசைக்கலைஞர் ஜெயராமனுக்கு

## முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் அஞ்சலி



தந்தையார் நாச்சிமார் கோயிலடி மிருதங்க வித்துவான் அம்பலவாணர் மகனாக இசைஞான சூழமைவில் வளர்ந்தவர் ஜெயராமன். மிக இளவயதிலிருந்தே வயலின் வித்துவான் எஸ். சர்வேஸ்வரசர்மாவிடம் முறைப்படி வயலின் இசை பயின்றவர்.

நிறைந்த கேள்வி ஞானம் கொண்டவர். சுத்தமான வாசிப்பினடியாக சுருதி வேந்தன் என கொண்டாடப்பட்டவர்.

எங்கள் இசையுலகின் வயலின் கலைஞராக அனைத்து வகை இசை அரங்குகளையும் நிறைத்திருந்த ஜெயராமனின் திடீர் மறைவு நெஞ்சுக்கு கனமானது; ஈடுசெய்ய முடியாதது. யாழ்.பொதுநூலகத்தில் பணியாற்றிய போதும் வயலினே அவர் வாழ்வாக விளங்கியது.

என்னுடைய ஆக்க இசை அரங்குகளில் அவரோடு இசைந்த பொழுதுகள் மறக்க முடியாதவை. சிவபுராண ஒலிப்பதிவில் மோகனராகத்தில் இருவரும் இரண்டறக் கலந்து நின்றபொழுதின் பதிவுகள் என்றென்றும் ஓய்வதில்லை. (ம-7,10)

# அரசியல் கட்சிகளை ரணில் பிளவுபடுத்துகிறார்

## உதய கம்மன்பில குற்றச்சாட்டு

பலமான கட்சிகளைப் பிளவுபடுத்தும் செயற்பாட்டை ஜனாதிபதி கச்சிதமாக கையாண்டு வருவதாக பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

அத்துடன், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் ஒன்றிணைப்பதற்கான செயற்பாடுகள் சிறந்த முறையில் முன்னெடுக்கப்படுவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், "கட்சியின் தலைவர் இல்லாமல் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் அரசியல் குழு கூட்டத்தை கூட்ட முடியாது.

கட்சியின் செயற்குழு மற்றும் நிறைவேற்று சபை ஊடாகவே தலைவரை நியமிக்க வேண்டும்.

தலைவராக பதவி வகித்த மைத்திரிபால சிறிசேனவுக்கு நீதிமன்றம் இடைக்கால தடையுத்தரவு பிறப்பித்தவுடன் அரசியலமைப்புக்கு முரணான தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

சுதந்திரக் கட்சியின் தலைவரின் அழைப்புக்கு அமையவே கட்சியின் ஆலோசகர் கூட்டங்களில் பங்குபற்ற முடியும்.

ஆனால் தற்போது கட்சியின் ஆலோசரான சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் தலைமைத்துவத்தில் அரசியல் குழு கூட்டம் கூட்டப்பட்டு, தவறான தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன. ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் ஒன்றிணைக்கும் செயற்பாடுகள் சிறந்த முறையில் முன்னெடுக்கப்படுகின்றன.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தவறான தீர்மானங்களினால் கட்சி பலவீனமடைந்துள்ளது.

ஒரு தரப்பினர் இதனை தமக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்கிறார்கள். பரந்துப்பட்ட அரசியல் கூட்டணி தொடர்பில் சகல தரப்பினருடனும் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளோம்.

மே தினத்துக்கு முன்னர் புதிய அரசியல் கூட்டணியை வெகுவிரைவில் ஸ்தாபிப்போம்.

அரசியல் கட்சிகளை பிளவுபடுத்தும் செயற்பாட்டை ஜனாதிபதி வெற்றிகரமாக முன்னெடுக்கிறார்" என உதய கம்மன்பில மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம-7,10)

# ரூ.6 கோடி பெறுமதியான ஹெரோயினுடன் ஒருவர் கைது

கொழும்பில் 1 கிலோ 105 கிராம் பெறுமதியான ஹெரோயின் போதைப்பொருளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேகநபரிடமிருந்து கைப்பற்றப்பட்ட போதைப்பொருளின் பெறுமதி 06 கோடி ரூபா எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர் வெல்லம்பிட்டிய பகுதியை சேர்ந்தவர் என்பதுடன் அவர் டுபாயில் தலைமறைவாகியுள்ள ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பல் தலைவரான கெஸ்வத்த தினுக வின் சகா எனவும்

சந்தேகநபர், குறித்த குற்றக் கும்பலின் அறிவுறுத்தலின்படி, போதைப்பொருட்களை பல்வேறு இடங்களுக்கு எடுத்துச்செல்வதற்கும் பணத்தை மாற்றுவதற்கும் நியமிக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது. (ம-7,10)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது பாடசாலையின் உப அதிபராக சீரிய பணியாற்றி அதிபராக பதவி உயர்வு பெற்று தற்போது கிளி/பள்ளிக்குடா அரசினர் வித்தியாலயத்தில் கடமையைப் பொறுப்பேற்றிருக்கும்

திரு. இராசரத்தினம் சுப்பிரமணியம்

அவர்களின் பணி மேலும் சிறக்க உளமார வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
ஆசிரியர் நட்புறவுக் கழகம்
யா/ கொடிகாமம் அரசினர் வித்தியாலயம்

(424)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டிருந்த

அமரர் தையல்நாயகி இரத்தினசிங்கம்

அவர்களின் 31 ஆம் நாள் நினைவஞ்சலி. அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - பாக்கியம் தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சண்முகநாதன் - பரமரட்ணம் தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற இரத்தினசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும் ஆவார்.

31 ஆம் நாள் அல்ல ஓர் ஆயிரம் ஆண்டுகள் சென்றாலும்,
நாம் உம்மை எப்படி மறப்போமம்மா!
தாங்காத வலியோடு தவிக்கின்றோமே அம்மா!
பரணியில் உம்மை காண்பது எப்போ அம்மா!
உயிருக்கு உயிராய் இருந்த எங்கள் தாய்த் தெய்வமே!

இங்ஙனம்: இரத்தினசிங்கம் விக்னேஸ்வரகுமார்

(419)

## கண்ணீர் அஞ்சலி

ஈழத்தின் புகழ் பூத்த வயலின் வித்துவான்

திரு. அம்பலவாணர் ஜெயராமன்



அவர்களின் பிரிவால் துயரத்தில் இருக்கும் குடும்பத்துக்கும் மற்றும் கலை உலகுக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.


இணுவையூர் வி.கே.குகானந்தன்
முன்னாள் உறுப்பினர்
நல்லூர் பிரதேச சபை,
தலைவர் ரசிகப்பிரியா சபா கலை வளர்ச்சி மையம் இணுவில்

(C-0107)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பேராசிரியர் சு.வித்தியானந்தன் நூற்றாண்டு விழா
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் மே,11.12.2024.
(சி-103)

# பெருமளவில் குறைவடைந்த கைத்தொலைபேசி விலைகள்



(கொழும்பு)

இலங்கையில் கைத்தொலைபேசிகளின் விலைகள் பெருமளவில் குறைவடைந்துள்ளன. டொலரின் பெறுமதி வீழ்ச்சி அடைந்துள்ள நிலையில் கைத்தொலைபேசிகளின் விலை 18 தொடக்கம் 20 வீதங்களால் குறைவடைந்துள்ளது என இலங்கை கையடக்க தொலைபேசி இறக்குமதியாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

தற்போது நாட்டில் இலங்கை ரூபாவிற்கு எதிரான அமெரிக்க டொலரின் பெறுமதி 300 ரூபா வரை வீழ்ச்சியடைந்துள்ளது.

இதையடுத்து, கடந்த வருடத்தில் டொலர் பெறுமதி அதிகரித்திருந்த போது உயர்வடைந்திருந்த கைத்தொலை பேசிகளின் விலைகள் தற்போது மீண் டும் குறைவடைந்துள்ளதாக குறித்த சங்கத்தின் தலைவர் சமித் செனரத் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக 515,000 முதல் 530,000 ரூபா வரை காணப்பட்ட ஐபோன் 15 pro max கைத்தொலைபேசி விலை தற்போது 375,000 ரூபா வரை குறைவடைந்துள்ளதாக சுட்டிக்காட்டியுள்ள சமித் செனரத் ஏனைய கைத்தொலைப்பேசிகளின் விலைகளும் பெருமளவில் குறைவடைந்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். (நி-5-6)

# அத்தியாவசியப் பொருட்களில் கலக்கப்படும் இரசாயனங்கள்

## இறப்புக்கள் அதிகரிக்கலாம் என எச்சரிக்கை

**(கொழும்பு)**

**இலங்கையின் சந்தையில் நுகர்வோருக்கு விற்பனை செய்யப்படும் உணவுகளில் 90 வீதத்திற்கும் அதிகமானவை பாவனைக்கு தகுதியற்றவை என இலங்கை பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் உறுப்பினர் பொது சுகாதார பரிசோதகர் சந்துன் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.**

அரிசி, பருப்பு, உப்பு, எண்ணெய், மரக்கறிகள் உட்பட அன்றாடம் உண்ணும் பெரும்பாலான அத்தியாவசிய உணவுப் பொருட்களில் வியாபாரிகள் இரசாயனப் பொருட்களைச் சேர்ப்பதால் இவ்வாறான நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த நிலைமை தொடர்பாக பொறுப்புள்ள தரப்பினரிடையே உடனடி மற்றும் விரிவான பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டும்.

இல்லாவிட்டால், இன்னும் 5-6 ஆண்டுகளுக்குப் பிறகு நாட்டில் தொற்றா நோய்களால் இறப்பவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கலாம் என்றும் அவர் தெரிவித்தார். (நி-5-6)

# மரண அறிவித்தல்

## அமரர். சின்னராசா சிவபாலசிங்கம்

**(ஓய்வு நிலை கிராம அலுவலர்)**



தோற்றம்-15.02.1952 | மறைவு-10.04.2024

ஆலடி ஒழுங்கை பொலிகண்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னராசா சிவபாலசிங்கம்(ஐயர்க்குட்டி விதானையார்-ஓய்வு நிலை கிராம அலுவலர்) அவர்கள் 10.04.2024 நேற்று புதன்கிழமை அதிகாலை கந்தன் கழலடி சேர்ந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னராசா-சிவகாமலக்ஸ்மி அம்மா தம்பதிகளின் புத்திரனும், காலஞ்சென்றவர்களான கந்தவனம்-தங்கமுத்து (மறியலப்பா) தம்பதிகளின் மருமகனும் காலஞ்சென்ற வசந்தகுமாரியின் ஆசைக்கணவரும், காலஞ்சென்ற சிவபாலன், சுமதி, காலஞ்சென்ற சுயம்பமூர்த்தி, விஜயகுமாரி(ஆசிரியை-பொலிகண்டி மக்கள் படிப்பகம்),காலஞ்சென்ற வேலவமூர்த்தி, சரவணன்(லண்டன்), விஜயலலிதா(லண்டன்), ராஜலக்ஸ்மி (ஆசிரியை-யா/ஆழியவளை சி.சி.த.க.வித்தியாலயம், யா/பொலிகண்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை),ராதிகா(ஆசிரியை-யா/செம்பியன்பற்று றோ.க.த.க பாடசாலை), பாலச்சந்திரன் (லண்டன்), மணிமாறன்(முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்-ஆளுநர் செயலகம்- வடக்கு மாகாணம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சோமசுந்தரம் (ஓய்வு நிலை முகாமைத்துவ உத்தியோகத்தர்-பருத்தித்துறை பிரதேச செயலகம்), குருபரன்(அபிவிருத்தி உத்தியோகத்தர்- சுதேச மருத்துவ திணைக்களம், யாழ்ப்பாணம்), மைதிலி(லண்டன்),ஸ்ரீராஜ்(லண்டன்), தயாளன்(ஆசிரியர்-யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), தமிழ் நிலா (லண்டன்) ஆகியோரின் மாமனாரும், பவதாரணி, விஸ்வரூபன், நிரூபன், சக்திகா, சங்கவி, கஜரூபன், கஜந், ஆதியா, சஜந், ஆதித்தன், ஆதிரா ஆகியோரின் பாசமிகு பேரனும், அமிர்தானந்தம்மா காலஞ்சென்றவர்களான சிவராசசிங்கம் மற்றும் நிர்மலாதேவி, குலவீரசிங்கம், சிவகவிதேவி(சுவிஸ்), சிவகுமாரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பொலிகண்டியில் உள்ள அவரது இல்லத்தில் 11.04.2024 இன்று வியாழக்கிழமை காலை 7.30 மணியளவில் நடைபெற்றுத் தகனக்கிரியைக்காக பூதவுடல் ஊரணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

ஆலடி ஒழுங்கை,
பொலிகண்டி.

தகவல்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இறுதிப் பந்தில் குஜராத் வெற்றி

## ராஜஸ்தானின் தொடர் வெற்றிக்கு முற்றுப் புள்ளி



விறுவிறுப்பான ஐ.பி.எல்., லீக் போட்டியில் கடைசி பந்தில் ரஷித் கான் பவுண்டரி அடித்து கைகொடுக்க குஜராத் அணி 3 விக்கெட் வித்தியாசத்தில் "திரில்" வெற்றி பெற்றது. சொந்த மண்ணில் ராஜஸ்தான் அணி ஏமாற்றியது.

இந்தியாவில் ஐ.பி.எல்., 17ஆவது சீசன் நடக்கிறது. ஜெய்ப்பூரில் நடந்த லீக் போட்டியில் ராஜஸ்தான், குஜராத் அணிகள் மோதின. மழையால் போட்டி 10 நிமிடம் தாமதமாக துவங்கியது.

நாணயச்சுழற்சியில் வென்ற குஜராத் அணித் தலைவர் சுப்மன் கில் "களத்டுப்பை" தேர்வு செய்தார்.

**பராக் விளாசல்**

ராஜஸ்தான் அணிக்கு யாஷஸ்வி ஜெய்ஸ்வால் (24) நல்லஆரம்பம் கொடுத்தார். பட்லர் (8) ஏமாற்றினார். பின் இணைந்த சஞ்சு சாம்சன், ரியான் பராக் ஜோடி நம்பிக்கை தந்தது. நூர் அகமட் வீசிய 13வது ஓவரில் 2 சிக்சர் பறக்கவிட்ட பராக், மோகித் பந்தை சிக்சருக்கு அனுப்பி 34 பந்தில் அரைச்சதம் கடந்தார். ஸ்பென்சர் ஜான்சன் வீசிய 15வது ஓவரில் 2 பவுண்டரி, ஒரு சிக்சர் விளாசிய சாம்சன், மோகித் சர்மா பந்தை பவுண்டரிக்கு அனுப்பி 31 பந்தில் அரைச்சதம் கடந்தார். மூன்றாவது விக்கெட்டுக்காக 130 ஓட்டங்கள் சேர்த்த போது மோகித் பந்தில் பராக் (76) ஆட்டமிழந்தார்.

20 ஓவர்களில் ராஜஸ்தான் அணி 3 விக்கெட்டுக்களை இழந்து 196 ஓட்டங்கள் எடுத்தது. சாம்சன் (68), ஹெட்மயர் (13) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

**சுப்மன் அரைச்சதம்**

சவாலான இலக்கை விரட்டிய குஜராத் அணிக்கு சாய் சுதர்சன், அணித் தலைவர் சுப்மன் கில் ஜோடி நல்ல ஆரம்பம் கொடுத்தது. முதல் விக்கெட்டுக்காக 64 ஓட்டங்கள் சேர்த்த போது குல்தீப் சென் பந்தில் சுதர்சன் (38) ஆட்டமிழந்தார். தொடர்ந்து மிரட்டிய குல்தீப் "வேகத்தில்" மத்யூ வேட் (4), அபினவ் மனோகர் (1) போல்டாகினர். சகால் "சுழலில்" விஜய் சங்கர் (16) போல்டானார். அபாரமாக ஆடிய சுப்மன் கில் (72), சகால் பந்தில் ஆட்டமிழந்தார்.

**திரில் வெற்றி**

ஷாருக்கான் (14) சோபிக்கவில்லை. குல்தீப் வீசிய 19வது ஓவரில் டிவாட்டியா 2, ரஷித் கான் ஒரு பவுண்டரி அடிக்க 20 ஓட்டங்கள் கிடைத்தன. கடைசி ஓவரில் வெற்றிக்கு 15 ஓட்டங்கள் தேவைப்பட்டன. அவேஷ் கான் பந்துவீசினார். முதல் 4 பந்தில், 2 பவுண்டரி உட்பட 11 ஓட்டங்கள் எடுத்தார் ரஷித். ஐந்தாவது பந்தில் மூன்றாவது ஓட்டத்துக்கு ஓடிய டிவாட்டியா (22) "ரன்-அவுட்" ஆனார். கடைசி பந்தை பவுண்டரிக்கு விரட்டிய ரஷித் வெற்றியை உறுதி செய்தார்.

20 ஓவர்களில் குஜராத் அணி 7 விக்கெட்டுக்கு 199 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது.

ரஷித் (24) ஆட்டமிழக்காமல் இருந்தார். ராஜஸ்தான் சார்பில் குல்தீப் சென் 3, சகால் 2 விக்கெட் வீழ்த்தினர். ஆட்ட நாயகன் விருதை ரஷித் கான் (குஜராத்) கைப்பற்றினார். (ம-7,10)

### கே.சீ.சீ வெற்றிக் கிண்ணம்

# யாழ்.பல்கலைக்கழக அணி 2ஆவது சுற்றுக்குத் தகுதி

## தயூஸ்ரன் - ரணாவின் 6ஆவது விக்கெட் இணைப்பாட்டம் வெற்றிக்கு வழிவகுத்தது

கே.சீ.சீ வெற்றிக் கிண்ணத்துக்காக 31ஆவது தடவையாக நடத்தி வெற்றிநடை போடும் மேற்படி வெற்றிக்கிண்ணத்தை கே.சீ.சீ விளையாட்டுக் கழகம் நடத்தி வருவது, யாழ். மாவட்டத்தில் உள்ள சகல விளையாட்டுக் கழகங்களும் நன்மை அடைவதும் துடுப்பாட்டத்தின் வளர்ச்சி எடுத்துக் காட்டுகின்றது என்பதில் ஐயமில்லை மேற்படி தொடரின் இரண்டாவது போட்டியும் நடைமுறையில் 12 வது போட்டியும் 06.04.2024 அன்று பிற்பகல் ஒரு மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் யாழ் பல்கலைக்கழக அணிக்கும் T.YMHA அணிக்கும் இடையில் நடைபெற்ற இரண்டாவது போட்டியில் யாழ் பல்கலைக்கழக அணி T.YMHA அணியை 83 ஓட்டங்களினால் வெற்றி பெற்று இரண்டாவது சுற்றுக்கு தகுதி பெற்றமை குறிப்பிடத்தக்கது.

நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற யாழ்.பல்கலைக்கழக அணி 30 ஓவர்களில் ஐந்து விக்கெட் இழப்பிற்கு 237 ஓட்டங்களினை பெற்றது.

கஜீபன் 88, யவான் றொசாந்தன் 36, சமாதி 19, சுகீதன் 15, தயூஸ்ரன் ஆட்டமிழக்காது 53, ரணா ஆட்டமிழக்காது 45, பகீரன், இளங்குமரன், கோபிநாத், கொன்சி, கபில் தவா ஒரு இலக்கினையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய T.YMHA அணி 24 தசம் நான்கு ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 154 ஓட்டங்களைப் பெற்றனர்.

யதுசன் 62, கொன்சிவீவியா 14 நிமால் 11 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் யாழ்பல்கலைக்கழக அணியை சார்ந்த ஸ்ரீமினோபன் ஒன்று யாதுஷ்சனன் ஒன்று ஜேம்ஸ் மூன்று ரணா 1, இபினு பாலசூரியன் 2 இலக்கினை கைப்பற்றினர்.

இப்போட்டிக்கு யேகஸ், பாலேந்திரா இருவரும் போட்டி நடுவர்களாக கடமையாற்றினர். (ம-7,10)


# கண்ணீர் அஞ்சலி



சுருதி வேந்தன்

அமரர் **அம்பலவாணர் ஜெயராமன்**

(பிரபல வயலின் வித்துவான்)

தந்தை வழியில் தனயனென
தளரா ஞான இசையோடு
சிந்தை தன்னில் தெளிவோங்க
சிறப்பாய் வயலினதை மீட்டி
முந்தை தலைமுறை தமக்கும்
முழுதாய் பெருமைதனை காட்டி
விந்தை செய்த விறலோனே
வேளை அறிந்த காத்தோனே

மகள் தொட்டு பேர்த்தியென
மகிழ்வாய் அரங்கு ஏறி நிற்க
அகம் கொண்ட அன்பாலே
ஆசி செய்த பெருங் கலையே
யுகம் கடந்த பாசத்தை
கொட்டி நின்ற வித்தகனே
இகம் கடக்கும் கணத்தேயும்
இசையே செய்த ஏழிசையே

ஓம் சாந்தி சாந்தி!! சாந்தி!!!

சிங்கம்ஸ் பார்மஸி
கோண்டாவில்.

(C-0108)

சிங்கம்ஸ் இல்லம்,
கோண்டாவில்.


### வரிச்சுமையை...

முன்தினம் நடைபெற்ற ரன்திய உயன வீட்டுத் தொகுதியை பயனாளிகளுக்குக் கையளிக்கும் நிகழ்விலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

2022ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இன்று வரையிலான இரண்டு வருடங்களுக்குள் நிம்மதியான மூச்சு விடக் கூடிய சூழலை எம்மால் உருவாக்க முடிந்துள்ளது.

உணவு, எரிவாயு, எரிபொருள் வரிசையில் நின்று அவதிப்பட்ட மக்கள் இன்று சுமூகமாக வாழ்கின்றனர். வரிசை யுகத்தில் கொழும்பு மக்கள் பெரும் அவதிப்பட்டனர்.

மாடிக்குடியிருப்பு களிலும் தோட்டங்களிலும் வசிக்கும் மக்களும் கடும் அவதிக்குள்ளாகினர்.

பொருளாதாரத்தைப் பலப்படுத்த நாம் நடைமுறைப்படுத்திய வரிக் கொள்கை வாழ்க்கைச் சுமையை மேலும் அதிகப்படுத்தியது.

ஆனால் அந்த கஷ்டங்களை நீங்கள் தாங்கிக் கொண்டதாலேயே, கடன் வாங்காமலும், பணம் அச்சடிக்காமலும் அரசாங்கத்தின் வருமானத்தை அதிகரிக்க முடிந்தது. அதனால் தான் இந்த வருடத்தில் அரச ஊழியர்களுக்கு 10,000 ரூபாய் சம்பள அதிகரிப்பை வழங்க முடிந்தது. ரூபாயின் பெறுமதியும் வலுவடைந்துள்ளது என குறிப்பிட்டுள்ளார். (ம-7,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விபத்துக்களால் நாளாந்தம் 10 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

**நாட்டில் வாகன விபத்துக்களால் உயிரிழப் போரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக கொழும்பு தேசிய வைத்தியசாலையின் விசேட சத்திரசிகிச்சை நிபுணர் வைத்தியர் சஜித் ரணதுங்க தெரிவித்துள்ளார்.**

வீதி விபத்துக்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக நேற்று முன்தினம் ஜனாதிபதி ஊடக மையத்தில் போக்குவரத்து அமைச்சு மற்றும் வீதி பாதுகாப்பு தேசிய சபை இணைந்து நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, 'நாட்டில் முச்சக்கர வண்டிகள் மோதிக்கொள்வதால் இடம்பெறும் விபத்துக்கள் மற்றும் மோட்டார் சைக்கிள் விபத்துக்களினால் உயிரிழப்போரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளன.

இலங்கையில் அதிவேக வீதிகளுக்கு வெளியில் இடம்பெறும் விபத்துக்களிலேயே அதிகளவானோர் மரணிக்கின்றனர். நாளாந்தம் 10 பேர் வரையில் உயிரிழக்கின்றனர். எனவே விபத்துக்களை மட்டுப்படுத்துவது குறித்து அவதானம் செலுத்த வேண்டும்' இவ்வாறு தெரிவித்துள்ளார். (நி-5-6)

## தேர்தலுக்குச் செல்வதற்கான மனப்பான்மை அரசாங்கத்திடம் இல்லை-சாந்த பண்டார

(கொழும்பு)

நாட்டை முன்னேற்றுவதையே அரசாங்கம் பிரதான நோக்கமாக கொண்டுள்ளதால் தற்போது தேர்தல் ஒன்றிற்கு செல்வதற்கான மனப்பாங்கு அரசாங்கத்திடம் இல்லை என ஊட கத்துறை இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊட கவியலாளர் சந்திப்பிலேயே இராஜாங்க அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

கடந்த சில ஆண்டுகளாக மக்கள் பல பிரச்சினைகளை எதிர்கொண்டனர். எரிபொருளுக்காக மக்கள் வரிசையில் நின்றனர். ஆனால் இம்முறை ஆடைகள் மற்றும் ஏனைய அத்தியாவசிய பொருட்களை வாங்குவதற்கு கடைகளில் மக்கள் அணிதிரள்வதை காண முடிகிறது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட வேலைத்திட்ட த்தின் பலனாகவே இந்த மாற்றம் நாட்டில் ஏற்பட்டிருக்கிறது.

தற்போதைய பொருளாதார வேலைத்திட்டத்தை தொடரவே விரும்புகிறோம். சரியான நேரத்தில் தேர்தலை நடத்துவது தேர்தல் ஆணைக்குழுவின் பொறுப்பாகும். தேர்தல் அறிவிக்கப்பட்டாலும் அத ற்கு முகம்கொடுக்க தயாராக இருக்கிறோம் என இராஜாங்க அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (நி-5-6)


லங்கா மஹால் (PVT) LTD

உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.

(396)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு :
0091956156719


WESTERN UNION WU MoneyGram. Ria MONEY TRANSFER

ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,
077 839 3974


## மரண அறிவித்தல்

தோற்றம்
20 - 10 - 1957



மறைவு
10 - 04 - 2024

### முத்தையா கெங்காதரன்

(ஓய்வு நிலை மின்சார சபை ஊழியர் - சுன்னாகம்)
(நிர்வாக சபை உறுப்பினர் - அழகொல்லை விநாயகர் ஆலயம்)

அளவெட்டி மத்தியை பிறப்பிடமாகவும் அலுக்கை, அளவெட்டி கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட முத்தையா கெங்காதரன் (10.04.2024) நேற்று புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகர் முத்தையா (ஓய்வு பெற்ற கிராம சேவையாளர் - அளவெட்டி) நேசமலர் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை இராசமணி தம்பதிகளின் அன்பு மருமகனும், கௌசலா அவர்களின் பாசமிகு கணவரும், கோபிகன் (3D Mobile), சிந்துஜன் (People's Leasing -Jaffna) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஷயானியின் அன்பு மாமனாரும், அபிலாஷின் பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான தாட்ஷாயினி, சிறீதரன், பகீரதன் மற்றும் தில்லை ஈஸ்வரி, செல்வநாயகி, சுபாஜினி (ஓய்வு நிலை நிதி உதவியாளர் - வலிகாமம் கல்வி திணைக்களம்), சசிதரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் கிருபாநாயகி, கிருபாகரன், கருணாநந்தசோதி, கோகிலநாயகி, சாந்தகுமார் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (11.04.2024) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக அளவெட்டி மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அலுக்கை,
அளவெட்டி கிழக்கு.

077 574 0231
077 476 7241

(c-105)

தகவல்:
குடும்பத்தினர்

## இராசிபலன்

11. 04. 2024
பங்குனி 29, வியாழக்கிழமை
திருதியை முன்னிரவு 6.58 மணிவரை

பரணி காலை 6.17 மணிவரை
கார்த்திகை பின்னிரவு 5.33 மணிவரை
சுபநேரம் 7.36-9.06 மணிவரை
இராகுகாலம்-1.36-3.06 மணிவரை

றமழான் பண்டிகை
சந்திராஷ்டமம் - உத்தரம்

வளவன்

**மேஷம்**: யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காண்பீர்கள், காலைப்பொழுதே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், வாக்கு மேன்மையுண்டு, பணத்தேவைகள் பூர்த்தியாகும்.

**கடகம்**: மற்றவர்கள் கடுமையாக நினைக்கும் வேலையொன்றை நீங்கள் எளிதில் செய்து முடிப்பீர்கள், பயணங்கள் கை கூடும் வாய்ப்புண்டு.

**துலாம்**: சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது. வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள், ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய நாள்.

**மகரம்**: ஏட்டிக்குப் போட்டியாகச் செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும்.

**ரிஷபம்**: உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் தகவல்கள் வந்து சேரலாம்.

**சிம்மம்**: எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள்.

**விருச்சிகம்**: பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், போசன சுகமுண்டு.

**கும்பம்**: உறவினர் வழியில் ஒத்துழைப்பு கிடைக்கும், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

**மிதுனம்**: எடுத்த செயலை முடிக்க ஒரு தடவைக்கு பல முறை அலைய நேரிடலாம், வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள், சயன சுகக் குறைவான நாள்.

**கன்னி**: பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, பிரிந்து சென்றவர்கள் பிரியமுடன் வந்திணைவர், வம்பு வழக்குகள் தீர்ந்து வளம் காணும் நாள்.

**தனுசு**: கடன் சுமை குறைந்து கவலைகள் தீரும் நாள், புகழ்மிக்கவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், வியாபார விரோதம் விலகும், கௌரவமான நாள்.

**மீனம்**: செய்தொழிலில் எதிர்பார்த்த முன்னேற்றம் காண்பீர்கள், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், பகை விலகி பாசம் கூடும் நாள், போசன சுகமுண்டு.

ஒருவன் வேண்டாததை வாங்கினால் வேண்டியதை விற்கக் கூடும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பிரமந்தனாறு கிராம அலுவலர் பிரிவில் விஷேட செயற்திட்ட கலந்துரையாடல்

(கிளிநொச்சி)

பிரமந்தனாறு கிராம அலுவலர் பிரிவில் உள்ள பயன்படுத்தப்படாத காணிகளை பயன்படுத்துதல், நீர்ப்பாசன வடிகாலமைப்பு, ஏற்று நீர்ப்பாசனம் மற்றும் வெள்ளப்பெருக்கு பற்றிய விஷேட ஆய்வு செயற்திட்டத்தின் கலந்துரையாடல் நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் பிரிவின் உதவிப் பணிப்பாளர் த.உமையாள் தலைமையில் பிரமந்தனாறு பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது செயற்திட்டத்தின் நோக்கம் மற்றும் பிரதேச மக்களின் உப உணவு பயிர்ச்செய்கை முறை, வடிகாலமைப்பின் தன்மை, ஏற்று நீர்ப்பாசனத்தின் சாத்திய கூறுகள், வெள்ளப்பெருக்கு இடம்பெறும் பகுதிகள் தொடர்பாக பொது மக்களின் கருத்துக்கள் தொடர்பில் ஆராயப்பட்டது.

இக்கலந்துரையாடலில் பிரமந்தனாறு கிராம அலுவலர், புளியம்பொக்கனை விவசாய போதனாசிரியர், நீர்ப்பாசன திணைக்களத்தின் தொழிநுட்ப உத்தியோகத்தர், கண்டாவளை பிரதேச செயலகத்தின் குடியேற்ற உத்தியோகத்தர், கண்டாவளை பிரதேச செயலகத்தின் காணிப்பயன்பாட்டு உத்தியோகத்தர், பிரமந்தனாறு கிராம அலுவலர் பிரிவின் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், சமூக மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள், மாவட்ட காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் அலுவலகத்தின் உத்தியோகத்தர்கள், பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். (நி-5-6)

# முள்ளியவளை விபத்தில் இளைஞன் பலி

## ஒருவர் படுகாயம்

(நெளுக்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளியவளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மாமூலைப் பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ள நிலையில் மேலுமொருவர் படுகாயமடைந்துள்ளார்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் இடம்பெற்றுள்ளது. மாமூலை விஸ்ணு கோவில் வீதியில் வேகமாக நேர் எதிரே வந்த இரு மோட்டார் சைக்கிள்கள் மோதிக் கொண்டதில் இவ் விபத்து சம்பவித்துள்ளது.

இந்த விபத்தின் போது முள்ளியவளை பூதன்வயல் கிராமத்தினைச் சேர்ந்த 18 வயதுடைய திருலோகச்சந்திரன் கேதீஸ்வரன் என்ற இளைஞன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

17 வயதுடைய மற்றும் ஒரு இளைஞன் படுகாயமடைந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் முள்ளியவளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (நி-5-6-299)




தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தான வருடாந்த பொங்கல் உற்சவம் நேற்று முன்தினம் வழுந்துப்பானை ஏற்றலுடன் ஆரம்பமான நிலையில் ஏராளமான அடியார்கள் பொங்கலிட்டு வழிபட்டனர். (படம் : சிவசாந்தன்)

# திறன் விருத்தி காட்சிக் களம்

(யாழ்ப்பாணம்)

பார்வையற்றோருக்கான அறக்கட்டளை நிலையம் நடத்தும் "விழிகள் செய்யும் விந்தையை விரல்கள் செய்யக் காணபீர்" எனும் தொனிப் பொருளிலான திறன் விருத்தி காட்சிக்களக் கண்காட்சி எதிர் வரும் 15 ஆம், 16 ஆம் திகதிகளில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரை யாழ்.மத்திய கல்லூரியில் தந்தை செல்வா கலையரங்கில் இடம்பெறவுள்ளது. (நி-5-6)



"சமுர்த்தி அபிமானி" வர்த்தக கண்காட்சியும் விற்பனை சந்தையும் பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் கடந்த செவ்வாய் மற்றும் புதன் ஆகிய நாட்களில் இடம்பெற்றது. (படம்: மகாலிங்கம்)

# நெடுந்தீவில் மக்கள் நலன்கள் தொடர்பில் அமைச்சர் கள ஆய்வு

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவின் மேற்கூர் பகுதிக்கு நேற்று முன்தினம் களவிஜயம் செய்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இவ்வாண்டிற்கான பன்முகப்படுத்தப்பட்ட நிதியொதுக்கீட்டில் புனரமைப்பதற்கு முன்மொழியப்பட்ட சில இடங்களையும் பார்வையிட்டதுடன் மக்களின் பிரச்சினைகள் குறித்தும் ஆராய்ந்தார்.

நெடுந்தீவு மக்களுக்கான குடிநீரை விநியோகம் செய்யப் பயன்படுத்தப்படும் சாராபிட்டி நன்னீர் கிணற்றில் சுத்தமான குடிநீர் மக்களுக்கு கிடைப்பதை உறுதிப்படுத்தவும்.

திருலிங்கநாதபுரம் மீன்பிடி இறங்கு துறைபகுதியில் கடற்றொழில் படகுகளின் பயணப் பாதையில் காணப்படும் பாறையை அகற்றுவது தொடர்பிலும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அமைச்சர் பணிப்புரை விடுத்தார். நெடுந்தீவைச் சேர்ந்த கடற்றொழில் சங்கம், விவசாய அமைப்புக்கள் உள்ளிட்ட சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்து தமது எதிர்பார்ப்புக்கள் தொடர்பாக கலந்துரையாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6-33)




அறிவாலயம் ஆளுமை விருத்தியக ஏற்பாட்டில் தமிழகத்தின் பிரபல பேச்சாளர் இலக்கிய சுடர் இராமலிங்கம் பங்கேற்ற சிந்தனை அரங்கம் கடந்த 6 ஆம் திகதி சனிக்கிழமை மாலை நல்லை ஆதீனத்தில் செந்தமிழ்ச் சொல்லருவி சுந்திரமௌலீசன் தலைமையில் நடைபெற்றது. (படம் : சிவசாந்தன்)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | நெல்லியடி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 150 | 170 | 100 | 200 | 120-140 |
| உருளைக்கிழங்கு | 180 | 180 | 150 | 200 | 150 |
| பச்சைமிளகாய் | 160 | 150 | 140 | 200 | 150-170 |
| தக்காளி | 140 | 100 | 100 | 150 | 60-80 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 130 | 120 | 200 | 120 |
| கோவா | 180 | 180 | 240 | 240 | 180 |
| கரட் | 300 | 350 | 380 | 400 | 300 |
| பூசணி | 160 | 140 | 100 | 140 | 80-100 |
| புடோல் | 120 | 200 | 120 | 100 | 100 |
| வாழைக்காய் | 150 | 120 | 80 | 160 | 80 |
| சின்ன வெங்காயம் | 350 | 250 | 250 | 350 | 200-350 |
| பெரிய வெங்காயம் | 600 | 350 | 330 | 400 | 300 |
| பாகற்காய் | 250 | 300 | 200 | 250 | 300 |
| வெண்டக்காய் | 80 | 150 | 100 | 200 | 120 |
| கருணைக் கிழங்கு | 120 | 140 | 120 | 150 | -- |
| பயற்றங்காய் | 120 | 160 | 100 | 100 | 100-150 |
| லீக்ஸ் | 350 | 250 | 250 | 300 | 220 |
| பீற்றூட் | 120 | 300 | 200 | 250 | 180 |
| கறிமிளகாய் | 300 | 300 | 200 | 300 | 300 |
| முருங்கைக்காய் | 800 | 700 | 500 | 800 | 300-600 |
| போஞ்சி | 300 | 450 | 250 | 400 | 170 |
| கத்தரிதம்புள்ள | 130 | 120 | 80 | 180 | -- |
| கீரை - 1 பிடி | 100 | 130 | 50 | 100 | 40-60 |
| தேசிக்காய் | 300 | 350 | 250 | 450 | 200-500 |
| தேங்காய் (ஒன்று) | 120 | 120 | 110 | 80-120 | 60-120 |
| இராசவள்ளி | 400 | 250 | 300 | 400 | -- |
| வெங்[illegible] | -- | 250 | 250 | 400 | -- |
| முள்[illegible] | 100 | 100 | 100 | 100 | 70 |
| பொன்[illegible]ங்காணி | 80 | 120 | 100 | 60 | 80 |
| வல்லாரை | 60 | 60 | 50 | 80 | 80 |
| [illegible] | 80 | -- | 100 | -- | 70 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அநீதிகளுக்கு எதிராக போராட்டம் அணி திரளுமாறு சம்பிக்க அழைப்பு

(கொழும்பு)

**உள்ளூர் சந்தைகளில் இடம்பெறும் அநீதிகளுக்கு எதிராக பாரிய போராட்டங்களை நடத்த மக்கள் அணி திரள வேண்டும் என ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க கேட்டுக் கொண்டுள்ளார்.**



கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

கடந்த காலத்தில் எண்ணெய், எரிவாயு, மின்சாரம் இல்லாத போது மக்கள் தங்கள் உரிமைகளுக்காக எழுந்து நின்றார்கள்.

ஆனால் உள்ளூர் சந்தைகளில் இடம்பெறுகின்ற அநீதிக்கு எதிராக இதுவரை அத்தகைய நடவடிக்கையை மக்கள் எடுக்கவில்லை. எனவே, நியாயமற்ற வர்த்தக நடைமுறைகளுக்கு எதிராக மக்கள் எழுந்து நிற்க வேண்டிய தருணம் வந்துள்ளது.

முகப்புத்தகத்தில் காட்சிப்படுதலுடன், நாட்டு மக்கள் அனைவரும் அறியும் வகையில் விலை அறிவிப்பு முறையை அறிவிக்க வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-5-6)

# புத்தாண்டு சுபவேளை பத்திரம் ஜனாதிபதியிடம் கையளிப்பு



(கொழும்பு)

தமிழ் சிங்களப் புத்தாண்டுக்கான சுபவேளை குறிப்புப் பத்திரம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் சம்பிரதாய முறைப்படி நேற்று புதன்கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து கையளிக்கப்பட்டது. கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அரச சுப நேர கணிப்புக் குழுவினால் தயாரிக்கப்பட்ட சுபவேளை குறிப்புப் பத்திரமே இவ்வாறு ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது.

புத்தசாசன, சமய கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க சம்பிரதாய முறைப்படி ஜனாதிபதிக்கு வழங்கி வைத்தார்.

புத்தாண்டு பிறப்பு, புண்ணிய காலம், உணவு சமைத்தல், அடுப்பு பற்றவைத்தல், உணவு உண்ணல், தலைக்கு எண்ணெய் தேய்த்தல், புத்தாண்டில் வேலைக்குப் புறப்பட்டு செல்லுதல் உள்ளிட்ட சுப காரியங்களுக்கான சுப நேரங்கள் மேற்படி பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் சோமரத்ன விதானபத்திரன உள்ளிட்ட பலர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். (நி-5-6)

# வெளிநாட்டுப் பயணங்களை தவிருங்கள்

## அரசாங்க உறுப்பினர்களுக்கு ஜனாதிபதி பணிப்புரை

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக அரசியல் பணிகளை மேற்கொள்வதற்கு பிரசன்னம் தேவைப்படுவதால், வெளிநாட்டுப் பயணங்களை முடிந்தவரை கட்டுப்படுத்துமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசாங்க உறுப்பினர்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலை நேரடி இலக்காகக் கொண்டு அரசியல் வேலைகளைத் தொடங்குவதற்கான ஊஞ்சல் பலகையாக இந்த ஆண்டு மே தின பேரணியை மிகப் பெரிய அளவில் நடத்த ஐக்கிய தேசியக்கட்சி திட்டமிட்டுள்ளது.

தற்போது, நாடு முழுவதும் தொழில் முறை குழுக்களுடன் கூட்டங்களை நடத்தும் பணியில் அந்தக்கட்சி ஈடுபட்டுள்ளது.

இந்தநிலையில் பல்வேறு கட்சிகள் மற்றும் குழுக்கள் இணைந்து கொள்ளவுள்ள பரந்த கூட்டணியை பிரதிநிதித்துவப்படுத்தி தேர்தலில் பங்கேற்க ஜனாதிபதி திட்டமிட்டுள்ளார். (நி-5-6)

# வெளிநாடு பறந்த மைத்திரி இது ஒரு தப்பிக்கும் முயற்சியா?

## காவிந்த எம்.பி சந்தேகம்



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெளிநாடு சென்றமை தொடர்பில் சந்தேகம் நிலவுவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் விசாரணை நடத்துமாறு கோரி குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் செய்யப்பட்ட முறைப்பாடு தொடர்பில் வாக்கு மூலம் வழங்குவதற்காக குற்றப் புலனாய்வு திணைக்களத்திற்கு விஜயம் செய்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் சர்ச்சைக்குரிய கருத்தை வெளியிட்ட மைத்திரிபால சிறிசேன வெளிநாடு சென்றமையால் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

மைத்திரிபால சிறிசேன நாட்டையும் ஆட்களையும் சாப்பிட்டு விட்டு இப்போது தாய்லாந்திற்கு சென்று விட்டாரோ என அஞ்சுகிறோம்.

இது ஒரு தப்பிக்கும் முயற்சியா? என தனிப்பட்ட முறையில் எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது.

அவரை உடனடியாக வரவழைத்து சட்டத்தை அமுல்படுத்துமாறு அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை


| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு :1992 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: 21 1/4<br>உயரம்: 170 cm<br>தகைமை/தொழில்: A/L, HNDA<br>எதிர்பார்ப்பு: குணமுள்ள பெண்<br>தொ.இ: B/14437 | பிறப்பு: 1998 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 24<br>உயரம : 5'5"<br>தகைமை/தொழில்: Doctor<br>எதிர்பார்ப்பு: Doctor, Engineer<br>தொ.இ: G/14460 |
| பிறப்பு:1994 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 14 3/4<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: BBM, Business<br>எதிர்பார்ப்பு: உத்தியோகம், பட்டதாரி, கொழும்பு விரும்பத்தக்கது.<br>தொ.இ: B/14439 | பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: 26 3/4 சூரி செவ் 8 இல்<br>உயரம் : 5'6"<br>தகைமை/தொழில்: NDT, Teacher<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/14461 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 09 உயரம் :5'5"<br>தகைமை/தொழில்: O/L, Own Business<br>எதிர்பார்ப்பு: நற்குணமுள்ள பெண்<br>தொ.இ: B/14441 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: 23<br>உயரம்: 172 cm<br>தகைமை/தொழில்: Bachelor of Information and Communication Technology<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு (கனடா, லண்டன், சுவிஸ், அவுஸ்திரேலியா)<br>தொ.இ: G/14463 |
| பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா: 30 உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: Bsc, HND, Msc (Following), Help Desk Manager<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி, உள்ளநாடு ஆயின் உத்தியோகம்<br>தொ.இ: B/14442 | பிறப்பு: 1997 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L, தாதியர்<br>எதிர்பார்ப்பு: அரச தொழில்<br>தொ.இ: G/14472 |

கல்யாணமாலை
இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## இஸ்ரேலிய பணயக் கைதிகளில் 34 பேர் படுகொலை



(காசா)

காசா பகுதியில் ஹமாஸ் போராளிகளால் பிடிக்கப் பட்ட இஸ்ரேலிய பணயக் கைதிகளில் 34 பேர் உயிரிழந்துள்ளதாகவும் 34 பேரில் 12 பேரின் உடல்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளதாகவும் வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

காசா பகுதியில் ஹமாஸ் போராளிகளை குறிவைத்து இஸ்ரேல் இராணுவம் நடத்திய தாக்குதல்களின் விளைவாக பணயக்கைதிகள் கொல்லப்பட்டதாக ஹமாஸ் தெரிவித்துள்ளது.

கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி இஸ்ரேலுக்குள் திடீரென புகுந்த ஹமாஸ் அமைப்பினர் 1200 இற்கும் மேற்பட்டவர்களை கொன்று 250 இற்கும் மேற்பட்டவர்களை பணயக் கைதிகளாக பிடித்துச் சென்றிருந்தனர்.

இதனையடுத்து காசா மீது பெரும் போரை இஸ்ரேல் நடத்தி வருவதுடன் பாரிய உயிரிழப்பு மற்றும் சொத்திழப்பு ஏற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

## பிரித்தானியாவு... நிபுணர்கள் கரு...

(லண்டன்)

**பிரித்தானியாவுக்குள் ஜாம்பி மருந்து ட்ராங்க் என்று அழைக்கப்படும் கால்நடை ம... நுழைந்து இருப்பதாக நிபுணர்கள் எச்சரி... துள்ளனர்.**

அமெரிக்க நகரங்களில் பெரும் தொல்லை கொடுத்த சட்டவிரோதமான மற்றும் சக்தி வாய்ந்த கால்நடை மயக்க மருந்தான சைலாசின் பிரித்தானிய நகரங்களிலும் நுழைந்து இருப்பதாக நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த சட்டவிரோதமான மருந்தை பயன்படுத்தியவர்களுக்கு ஏற்பட்ட விளைவுகளை கொண்டு இந்த சைலாசின் மருந்து ஜாம்பி மருந்து அல்லது ட்ராங்க் என்று அழைக்கப்படுகிறது.

இதன் தீவிர தன்மை கருதி "நாட்டின் வளர்ந்து வரும் ஆபத்து" என்று வெள்ளை மாளிகை எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்த மருந்து பெரும் பாலும் ஹெரோயின் போன்ற போதைப் பொருட்களுடன் கலந்து பயன்படுத்தப்படுகிறது.

## ரஃபா மீது தாக்குதல் உறுதி பிரதமர் நெதன்யாகு அதிரடி

(ஜெருசலேம்)

ரஃபா மீது தாக்குதல் நடத்தினால்தான் ஹமாஸ் அமைப்பிற்கு எதிரான போரின் இலக்கு நிறைவடையும் என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

காசா மீது இஸ்ரேல் இராணுவம் நடத்திவரும் தாக்குதலானது 6 மாதங்களைக் கடந்து நீடித்து வரும் நிலையிலேயே இஸ்ரேல் பிரதமர் குறித்த அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்.

ஹமாஸ் அமைப்பின் வலுவான இடமாக கருதப்பட்ட கான் யூனிஸ் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தியது. அந்த நகரத்தை இருக்கும் இடம் தெரியாத அளவிற்கு துவம்சம் செய்துவிட்டது. ஹமாஸ் அமைப்பினர் பயன்படுத்தி வந்த சுரங்கப்பாதைகளை அழித்தது.

இந்த நிலையில்தான் ரஃபா மீது தாக்குதல் நடத்த தயாராகி வருவதாகவும் ரஃபா மீது தாக்குதல் நடத்தினால்தான் ஹமாஸ் அமைப்பிற்கு எதிரான போரின் இலக்கு நிறைவடையும் என இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.



எனினும் ரஃபாவில் 1.4 மில்லியன் பாலஸ்தீன மக்கள் இருப்பதால் ரஃபா மீது தாக்குதல் நடத்த அமெரிக்கா விருப்பம் தெரிவிக்கவில்லை எனவும் அம்மக்களை பாதுகாப்பான இடத்திற்கு வெளியேற்ற அமெரிக்கா வலியுறுத்தி வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஹமாஸ் உடன் போர் நிறுத்த ஒப்பந்தத்தை ஏற்படுத்துவதற்கான சர்வதேச முயற்சிகள் குறித்து இஸ்ரேலிய அதிகாரிகள் கெய்ரோவில் விவாதித்து வரும் நிலையில் நெதன்யாகு இவ்வாறு தெரிவித்துள்ளார்.

காசா மீது இஸ்ரேல் இராணுவம் நடத்திய தாக்குதலில் இதுவரை 33,200 பேர் கொல்லப்பட்டுள்ளனர். 76 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் காயம் அடைந்துள்ளனர்.

ரஃபா மீது தரைவழி தாக்குதலை நடத்த இராணுவத்தை ஒருங்கிணைப்பதற்காக கான் யூனிஸ் நகரில் இருந்து இராணுவம் வெளியேறியுள்ளது என இஸ்ரேல் இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (நி-5-6)

## கேத்லீன் புயல்... வெள்ளத்தில் மூழ்...

(லண்டன்)

பிரித்தானியாவில் ஏற்பட்ட கேத்லீன் புயலுக்குப் பிறகு அந்நாட்டின் மேற்கு சசெக்ஸில் பிராந்தியம் கடுமையான வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளதாக பிரித்தானிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதன் காரணமாக குறித்த பிரதேசத்தில் வசிக்கும் குடியிருப்பாளர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் தாழ் நிலப் பகுதிகளில் இருந்து வெளியேறுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

எனினும் புயலின் தாக்கமானது தற்போதுவரை சீரான நிலைக்கு வராத நிலையில் அந்நாட்டு மக்களுக்கு அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.



பிரித்தானியா முழுவதும் நூற்றுக்கணக்கான பகுதிகளுக்கு வெள்ள எச்சரிக்கைகள் விடுக்கப்பட்ட நிலையில் மெட்மெரி ஹாலிடே பூங்காவில் இருந்து கிட்டத்தட்ட 200 பேர் மீட்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...வுக்குள் 'ஜாம்பி'
# ...றும் எச்சரிக்கை

...ந்து அல்லது
...மயக்க மருந்து
...ரிக்கை விடுத்



இது கணிக்க முடியாத மற்றும் மிகவும் ஆபத்தான கலவையை உருவாக்குகிறது.

சைலாசின் பயன்படுத் தியவர் மயக்கத்தில் இருந்து மீண்டெழுந்த பிறகு கூட, சுவாசிப்பதில் சிரமத்தை ஏற்படுத்தும்.

இது தீவிர உடல்நல பிரச்சினை கள் மற்றும் இறப்புக்கும் வழி வகுக் கும்.

பிரித்தானியாவில் இதன் தீவிர தன்மை வளர்ந்து வருவதாக நிபுணர்கள் எச்சரிக்கை தெரிவித்துள்ள னர்.

ஆராய்ச்சியாளர்கள் 35 சைலாசின் வழக்கு களை இங்கிலாந்து, ஸ்கொட்லாந்து, மற்றும் வேல்ஸ் ஆகிய பகுதிக ளில் கடந்த ஆண்டு ஓக ஸ்ட் இறுதியில் கண்டறிந் துள்ளமை குறிப்பிடத்தக் கது. (நி-5-6)

## பாலஸ்தீனத்தை அங்கீகரிக்க தயார்
### அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர்



(கன்பரா)

பாலஸ்தீன தேசத்தை அங்கீகரிக்க தயார் என அவு ஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் பெனிவொங் தெரி வித்துள்ளார். எனினும் பால ஸ்தீன தேசத்தின் ஆட்சியில் ஹமாஸிற்கு இடமில்லை எனவும் அவர் குறிப்பிட்டு ள்ளார்.

பல தசாப்தங்களாக இந்த அணுகுமுறையை பின் பற்றுவதற்கு அனைத்து தரப்பினரும் தவறியமையும் பாலஸ்தீனதேசம் குறித்த விடயத்தில் ஈடுபாட்டை காண் பிப்பதற்கு நெத்தன் யாகு அரசாங்கம் தவறிய மையும் பரந்துபட்ட அதி ருப்தியை ஏற்படுத்தியிருந் ததாகவும் அவர் தெரிவித் துள்ளார்.

இதன் காரணமாக இர ண்டு தேசத்தினை நோக்கிய செயற்பாடாக பாலஸ்தீன தேசம் குறித்து சர்வதேச சமூகம் தற்போது சிந்திக் கின்றது எனவும் அவர் தெரி வித்துள்ளார்.

பாலஸ்தீன தேசத்தை அங்கீகரிப்பது எதிரிக்கு வெகு மதி அளிக்கும் செயல் என் பது தவறான கருத்து. இஸ் ரேலின் பாதுகாப்பு என்பது இரண்டு தேச கொள்கை யிலேயே தங்கியுள்ளது என வும் அவர் தெரிவித்துள் ளார்.

அதேவேளை இரண்டு தேச கொள்கையை ஏற்றுக் கொள்வது ஹமாஸினை பலவீனப்படுத்த உதவும் எனவும் அவர் தெரிவித் துள்ளார். (நி-5-6)

# ...ல் தாக்கத்தால்
## ...ழ்கிய பிரித்தானியா



...கப்பட்டதாக தெரிவிக்கப்படுகி றது.

தெற்கு இங்கிலாந்தின் லிட்டில்ஹாம்டன் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிக ளில் ஒரே இரவில் பலர் வெளி யேற்றப்பட்டதாகவும் கூறப்படு கிறது.

இந்நிலையில் சில இடங்களில், 65 மைல் வேகத்தில் காற்று வீசும் என வானிலை அலுவ லகத்தால் மஞ்சள் எச் சரிக்கை விடுக்கப்பட்டுள் ளதாகவும் போர்ன்மவுத் தில் காணப்பட்ட கடற் கரை குடிசைகள் கடலுக் குள் இழுத்துச் செல்லப் பட்டுள்ளதாகவும் அதி காரிகள் தெரிவித்துள்ள னர்.

இதன்படி கேத்லீன் புயலுக்குப் பிறகு அடுத்த சில நாட்களில் தெற்கு இங் கிலாந்து, மேற்கு வேல்ஸ், வடக்கு அயர்லாந்து மற் றும் ஸ்காட்லாந்தின் சில பகுதிகளில் கனமழை மற்றும் பலத்த காற்று தொடர்ந்து வீசும் என்று முன்னறிவிப்பாளர்கள் எச் சரித்துள்ளனர். (நி-5-6)

# இஸ்ரேலுக்கு ஆயுத விற்பனை முன்னெடுப்பதை தடுக்க முடியாது
## டேவிட் கேமரூன்



(லண்டன்)

பிரித்தானிய நிறுவன ங்கள் இஸ்ரேலுக்கு ஆயுத விற்பனை முன்னெடுப்பதை தடுக்க முடியாது என வெளி விவகார அமைச்சர் டேவிட் கேமரூன் தெரிவித்துள் ளார்.

காசா மீது கடந்த ஆறு மாதங்களாக கடுமையான தாக்குதலை இஸ்ரேல் முன் னெடுத்து வருகிறது. இந்த நிலையில், இஸ்ரேலுக்கு ஆயுத ஏற்றுமதியை அனும திக்கும் உரிமங்களை ரத்து செய்ய பிரதமர் ரிஷி சுனக் கின் அரசாங்கம் கடும் அழு த்தத்திற்கு உள்ளாகியுள் ளது.

இதனையடுத்து விளக்க மளித்துள்ள வெளிவிவகார அமைச்சர் டேவிட் கேமரூன், இஸ்ரேலுக்கான ஏற்றுமதி உரிமங்களில் பிரித்தானி யாவின் நிலைப்பாட்டில் மாற்றமில்லை என்றார்.

இருப்பினும் மதிப்பாய் [illegible] என்றும் அவர் குறிப்பிட்டுள் ளார். 2022 இல் 53 மில்லி யன் டொலர் மதிப்பிலான ஆயுதங்களை பிரித்தானியா இஸ்ரேலுக்கு ஏற்றுமதி செய் துள்ளது.


இந்த நிலையில், கடந்த வாரம் மூன்று முன்னாள் நீதிபதி உட்பட 600 சட்டத் துறை உறுப்பினர்கள் திர ண்டு, காசாவில் நடந்தேறும் இனப்படுகொலையில் பிரி த்தானியாவை உடந்தையாக ஆக்க முடியும் என்று கூறி, இஸ்ரேலுக்கான ஆயுத விற் பனையை அரசாங்கம் நிறு த்த வேண்டும் என கோரி க்கை விடுத்தனர்.

ஆனால் காசா மீதான தாக்குதலில் தாங்கள் போர்க் குற்றம் செய்ததாக இஸ்ரேல் மறுத்து வருகிறது.

இஸ்ரேலுக்கான ஆயுத ஏற்றுமதி நீடிக்கும் என அறி வித்துள்ள டேவிட் கேமரூன், காசாவில் மனிதாபிமான அணுகல் பிரச்சினை குறித்து பிரித்தானியா தொடர்ந்து தீவிர கவலை கொண்டுள் ளது என குறிப்பிட்டுள் ளார். (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடளாவிய ரீதியில் இடம்பெற்ற நோன்புப்பெருநாள் தொழுகை



(கொழும்பு)

இஸ்லாமியர்கள் ஒரு மாத கால நோன்பை நிறைவு செய்து, ஈதுல் பித்ர் ரமழான் பண்டிகையை நேற்று புதன் கிழமை உலகெங்கும் கொண்டாடினர். அந்தவகையில் இலங்கையிலும் இஸ்லாமியர்கள் நேற்று ரமழான் தொழுகைகளில் ஈடுபட்டனர்.

நாடு முழுவதும் உள்ள பல பள்ளி வாசல்கள் மற்றும் திடல்களில் இஸ்லாமியர்கள் தொழுகைகளை முன்னெடுத்தனர். (நி-5-6)

# இணையத்தளம் மீதான சைபர் தாக்குதல் சர்வதேச உதவியை நாடிய இலங்கை

(கொழும்பு)

கல்வி அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத் தளத்தின் மீதான சைபர் தாக் குதல் இந்த நாட்டில் உள்ள இணைய இணைப்பின் ஊடாக மேற்கொள்ளப் பட்டுள்ளது.

அதனை யார் மேற் கொண்டார் என்பதை அடையாளம் காண சர்வதேச உதவி கோரப்பட்டுள்ளதாக இலங்கை கணினி அவசர பதில் மன்ற த்தின் சிரேஷ்ட தகவல் பாது காப்பு பொறியியலாளர் சாருக தமுனு பொல தெரிவித்தார்.

இது தொடர்பான அனைத்து விபரங்களும் அடங்கிய அறிக்கை கல்வி அமைச்சிடம் கையளிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை கடந்த வெள் ளிக்கிழமை சைபர் தாக்கு தலுக்கு உள்ளான கல்வி அமைச்சின் இணையத் தளம் இன்னும் செயலற்ற நிலையில் உள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

# அஸ்வெசும நலன்புரித்திட்டம் மேலும் 182,140 குடும்பங்களுக்கு

## நிதி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு



(கொழும்பு)

மேன்முறையீடுகள் மற்றும் ஆட்சேபனைகளை பரிசீலித்த தன் அடிப்படையில் மேலும் 182,140 குடும்பங்கள் நிவார ணம் பெறத்தகுதி பெற்றுள்ள தாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

அவர் களுக்கான நிலுவைத் தொகைகள் உட்பட அனைத்து கொடுப்பனவுகளும் ஏப்ரல் 18 ஆம் திகதிக்குள் கணக்கிடப்படும் என அமைச்சர் தெரிவித் தார்.

அதன்படி, தற்போது 1,854,000 பேர் நன்மைகளைப் பெற்று வருவதாகவும், அத ற்காக அரசாங்கம் 58.5 பில்லி யன் ரூபாவைச் செலவிடுவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, நன்மைகளைப் பெறுவதற்கான சகல தகுதிகளையும் பூர்த்தி செய்த சுமார் 200,000 குடும்பங்கள் தமது வங்கிக் கணக்குகளைத் திறந்து அது தொடர்பான தக வல்களைப் புதுப்பிக்கத் தவறியுள்ளனர்.

இது தொடர்பில் பிரதேச செயலகங்கள் மற்றும் ஊடகங்கள் தெரிவித்த போதிலும், அந்த குடும்பங்களைச் சேர்ந்தவர்களிடம் இருந்து இதுவரை எவ்வித பதிலும் இல்லை எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

மேலும் இரண்டாம் கட்ட தீர்விற்காக 400,000 இற்கும் அதிகமான விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும், அவற்றில் சுமார் 286,000 இதுவரை முறைமைக்குள் உள்வாங்கப்பட்டுள்ளதாகவும், இது தொடர்பான மக்கள் தொகை கணக்கெடுப்பு பணி மே மாதம் தொடங்க உள்ளது எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் அஸ்வெசும நலன் புரித்திட்டத்தில் 24 இலட்சம் குடும்பங்களை உள்வாங்க அரசாங்கம் எதிர் பார்த்துள்ளதுடன், இந்த வருட வரவு- செலவுத் திட்டத்தில் இதற்காக ஒதுக்கப் பட்டுள்ள தொகை 205 பில்லியன் ரூபாவாகும் எனவும் குறிப்பிட்டுள்ளார். (நி-5-6)

# இன்று ஒரு தகவல் 91



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## வரதட்சணை!

ஒருத்தர் சொன்னார்:

என் மாமனார் எனக்கு பொண்ணு குடுத்தார். அதைத்தவிர வேறு எதுவுமே குடுக்கலே...! அப்படிஎன்று! சத்தம் போட்டு சொல்லாதீங்க சார்.. ஜெயில்ல போட்டுப் போறாங்க! என்றார் இன்னொருத்தர்.

ஏன் அப்படிச் சொல்றீங்க? என்று கேட்டார் அவர். வரதட்சணை வாங்கிறதும் தப்பு குடுக்கிறதும் தப்பு! சட்டவிரோதம்! தெரியும் அல்லவா என்றார். நான் அதைப் பற்றி எதுவும் சொல்லவில்லையே என்றார் அவர். வேறு எதைப்பற்றி என்று கேட்டார் இவர். என் மாமனார் எனக்குப் பெண் கொடுத்தார் ஆனால் அந்த பெண்ணோட சுபாவம் எப்படி என்று முன் கூட்டியே எச்சரிக்கை எதுவும் கொடுக்கவில்லை அதைத்தான் சொல்ல வந்தேன். அப்படிக்கொடுத்திருந்தால் குடும்பத்திலே நான் இன்னும் கொஞ்சம் முன்யோசனையோட நடந்து கொண்டிருப்பேன் என்றார்.

இவருடைய கவலை இவரோடு இருக்கட்டும் இப்போது நான் சொல்ல வந்த விடயம் என்னவென்றால் வரதட்சணை தடுப்புச் சட்டம் என்று இப்போது நாம் நிறையப் பேசிக் கொண்டிருக்கிறோமே இது அந்தக் காலத்திலேயே இருந்திருக்கு. அது சம்பந்தமாக ஒரு கல்வெட்டு இருப்பதாக தொல்பொருள் ஆய்வுத்துறையிலிருந்து தகவல் கொடுத்திருக்கிறார்கள் வட ஆர்காடு மாவட்டம் வேலூருக்குப் பக்கத்திலே விருஞ்சிபுரம் என்று ஒரு ஊர். அந்த ஊரிலே ஒரு கோபிநாதப் பெருமாள் கோவில் இருக்கு அதிலே ஒரு கல்வெட்டு இருக்கிறது. கி.பி 15 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த விஜயநகர அரசர் வீரப் பிரதாப தேவமாராயர் இந்த கல்வெட்டு மூலமாக ஒரு உத்தரவு போட்டிருக்கிறார். இந்தக் காலத்திலே வரதட்சணை என்றால் பெண்ணைப் பெற்றவர்கள் கொடுக்கிறது தானே வழக்கம். ஆனால் அப்போது எல்லாம் மாப்பிள்ளை வீட்டுக்காரர் கொடுத்திருக்கிறார்கள். மாப்பிள்ளை வீட்டுக்காரர் ராஜாவிடம் போய் முறையிட்டுடிருக்கிறார்கள் பெண்வீட்டுக்காரர் செய்கின்ற பிடிவாதம் பொறுக்கமுடியவில்லை என்று உடனே ராஜா பண்டிதர்களை எல்லாம் கூப்பிட்டார்.

தர்மசாஸ்திரங்களிலே வரதட்சணை கொடுப்பது பற்றி குறிப்பு ஏதாவது இருக்கா என்று பார்த்துச் சொல்லுங்கள் என்றார். பண்டிதர்கள் பெருமாள் கோவிலிலே கூடியிருந்து சாஸ்திரங்களை எல்லாம் ஆராய்ந்து பார்த்தார்கள். ஆராய்ந்து பார்த்து விட்டு வரதட்சணை வாங்குவது தர்மத்திற்குப் புறம்பானது என்று சொல்லிவிட்டார்கள்.

கி.பி 1426 ஆம் வருடம் பெப்ரவரி மாதம் 27 ஆம் திகதி விஜயநகர அரசர் வீரப்பிரதாப தேவமாராயர் அளித்த உத்தரவுப்படி மாப்பிள்ளை வீட்டார் பெண்வீட்டாருக்கு வரதட்சணையாக பொன் அழிக்கக்கூடாது என்று கல்வெட்டிலே எழுதியிருக்கு. தமிழர், கன்னடியர்,தெலுங்கர், இலாளர் ஆகிய பெண் வீட்டார் மாப்பிள்ளை வீட்டாரிடம் இருந்து வரதட்சணை பெறக்கூடாது என்றும் அவ்வாறு பெற்றால் அரச தண்டனை பெறுவார் என்றும் மன்னர் ஆணையிட்டிருக்கிறார்.

மாப்பிள்ளை வீட்டாரும் வரதட்சணை கொடுக்கக்கூடாது என்றும் இதை மீறுபவர்கள் தங்கள் இனத்தில் இருந்து விலக்கி வைக்கப்படுவார்கள் என்றும் அந்த கல்வெட்டிலே இருக்கிறது.

இதிலே ஒரு விடயம் பார்த்தீர்களா அரசன் ஆணையிட்டால் மட்டும் போதாது மக்களும் தங்களுக்குள்ளே கட்டுப்பாடோடு இருந்தால் தான் சமுதாய துன்பங்களிலே இருந்து மீள முடியும் என்பதை அவர்கள் நன்றாக உணர்ந்திருக்கிறார்கள்.

அதனாலே தான் தப்பு செய்தால் தங்கள் இனத்திலே இருந்து விலக்கப்படுவார்கள் என்று ஒரு விதிமுறையை வகுத்திருக்கிறார்கள். காலம் எப்படி மாறிக்கொண்டிருக்குப்பாருங்கள். மாப்பிள்ளையைப் பெற்றவர்களுக்கு மாப்பிள்ளை ஒரு சுமையாக இருந்தது ஒருகாலம்.

பெண்ணைப் பெற்றவர்களுக்கு பெண் ஒரு சுமையாக இருந்தது ஒரு காலம்.

இந்தக் காலத்து மாப்பிள்ளை ஒருவர் மாமனாரைத் தேடிப் போனாராம் என்ன மாப்பிள்ளை எப்படி இருக்கிறீங்க என் பொண்ணு எப்படி என்று கேட்டிருக்கிறார் மாமனார். உங்க பெண் எதுக்கெடுத்தாலும் எடுத்தெறிந்து பேசுறாள் அப்படி என்று குறைப்பட்டுக்கொண்டார் மாப்பிள்ளை.

அதை எப்படி மாப்பிள்ளை சமாளிக்கிறீங்க என்று கேட்டார் மாமனார். எடுத்தெறிவது என்மேலே படாமல் நான் கொஞ்சம் சாமர்த்தியமாக ஒதுங்கி நின்று கொள்கிறேன் என்றார் மாப்பிள்ளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியாவில் இனம் தெரியாத நபரொருவரின் சடலம் மீட்பு

## அடையாளப்படுத்த உதவுமாறு கோரிக்கை

(குருமன்காடு)

வவுனியா, நெளுக்குளம் குளத்தினுள் நேற்றுக்காலை சடலமொன்று மீட்கப்பட்டுள்ளதுடன், சடலத்தினை அடையாளம் காண உதவுமாறு நெளுக்குளம் பொலிஸார் கோரிக்கைவிடுத்துள்ளனர்.

வவுனியா, நெளுக்குளம் குளக்கட்டு பாதையூடாக சென்ற நபரொருவர் குளத்தினுள் சடலம் மிதப்பதினை அவதானித்துள்ளார்.

இதனையடுத்து அவர் நெளுக்குளம் பொலிஸார் மற்றும் பொது அமைப்புக்களுக்கு வழங்கிய தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்திற்கு விரைந்த நெளுக்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

குறித்த மரணம் தொடர்பில் தடவியல் பொலிஸார் மற்றும் நெளுக்குளம் பொலிஸார் இணைந்து முன்னெடுப்பதுடன் சடலத்தினை அடையாளம் காண உதவுமாறும் பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சடலமாக காணப்படும் நபர் மஞ்சள் நிற மேற்சட்டையுடன் சாரமும் அணிந்துள்ளதுடன், 55 தொடக்கம் 60 வயதுக்குட்டவராக இருக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (நி-5-6-250)

# புழுதியாறு குள நீர்ப்பாசனம் புனரமைப்பது தொடர்பில் ஆராய்வு

(அக்கராயன்)

கிளிநொச்சி மாவட்டத்தின் மாயவனூர் புழுதியாறு குள ஏற்று நீர்ப்பாசன திட்ட புனரமைப்பு தொடர்பான ஆரம்ப கட்ட கலந்துரையாடல் கடந்த திங்கட்கிழமை கிளிநொச்சி மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரன் தலைமையில், மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இக் கலந்துரையாடலில் குறித்த திட்ட புனரமைப்புக்கான அனுமதியை வடக்கு மாகாண சபையிடம் பெறுவது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

மேலும், குறித்த பகுதியில் பயிர்ச்செய்கை தொடர்பில் ஆய்வொன்றை மேற்கொள்வதுடன், இப்பகுதி விவசாயிகளுடன் குறித்த பகுதியில் சந்திப்பொன்றை மேற்கொள்வது தொடர்பில் தீர்மானிக்கப்பட்டது.

இக் கலந்துரையாடலில் மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளர், மாவட்ட பிரதி நீர்பாசன பணிப்பாளர், கரைச்சி பிரதேச செயலாளர், கமநல அபிவிருத்தி திணைக்கள உதவி ஆணையாளர், நீர்ப்பாசன பொறியியலாளர், மாவட்ட ஒருங்கிணைப்பு குழு தலைவரின் இணைப்பாளர், மாவட்ட செயலக உதவி திட்டமிடல் பணிப்பாளர், மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர், அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (நி-5-6-316-350)

# புதுக்குடியிருப்பில் இடம்பெற்ற வடமாகாண தொழிற்றுறை வர்த்தக சந்தை


(புதுக்குடியிருப்பு)

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு வடக்கு மாகாண தொழிற்றுறைத் திணைக்களம் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துடன் இணைந்து நடத்திய வட மாகாண தொழிற்றுறை வர்த்தக சந்தை புதுக்குடியிருப்பில் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வடமாகாண தொழிற்றுறை திணைக்கள பணிப்பாளர் வனஜா செல்வரத்தினம் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் அ.உமாமகேஸ்வரன் பிரதம அதிதியாக கலந்துகொண்டு நாடாவை வெட்டி திறந்து வைத்தார்.

நிகழ்வில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சி.குணபாலன், வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சின் உதவி செயலாளர் ராஜமல்லிகை, கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் திருமதி ம.உமாமகள், புதுக்குடியிருப்பு பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர், புதுக்குடியிருப்பு பிரதேச செயலக கணக்காளர், புதுக்குடியிருப்பு பிரதேச சபை செயலாளர், மாவட்ட தொழிற்றுறை திணைக்கள உதவிப் பணிப்பாளர் மற்றும் கிளிநொச்சி, யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா ஆகிய மாவட்ட உதவிப் பணிப்பாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

மேலும் இவ் வர்த்தக சந்தை நேற்று இடம்பெற்று இருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)



## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3086

### நயன்




### கம்சி




### கலா




### சுஜி




### அபி




### சரண்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 2

காவியத் தொடர் 452





"சமுத்திரகுமாரி! உன் படகை எங்கே விட்டு வந்தாய்?"

"என் படகு ஏறக்குறைய இந்த ஆற்றின் நடுமத்தியில் அல்லவா இருக்கிறது? யானை மீது வந்தபடியால், அதுவும் நீங்கள் யானையைச் செலுத்தியபடியால், இவ்வளவு சீக்கிரம் வந்து விட்டோம். படகில் ஏறியிருந்தால் நள்ளிரவுக்குத் தான் இங்கு வந்திருப்போம்."

"சரி! நன்றாக இருட்டுவதற்குள் இந்த நதிக்கரையோரமாகப் போய்ப் பார்க்கலாம் வா! இங்குள்ள மரங்கள் கடல் நன்றாய்த் தெரியாமல் மறைக்கின்றன. ஒரு வேளை இன்னொரு கப்பலைக் கடலில் சற்றுத் தூரத்தில் கொண்டு போய் நிறுத்தியிருக்கலாம் அல்லவா?"

யானையை அங்கேயே விட்டு விட்டு இருவரும் நதிக்கரையோரமாகக் கடலை நோக்கிப் போனார்கள். சீக்கிரத்திலேயே கடற்கரை வந்துவிட்டது. கடலில் அமைதி குடிகொண்டிருந்தது. அலை என்பதற்கு அறிகுறியும் இல்லை. கண்ணுக்கெட்டிய தூரம் ஒரே பச்சை வர்ணத் தகடாகம் தோன்றியது. கடலின் பச்சை நிறமும் வானத்தின் மங்கிய நீல நிறமும் வெகு தூரத்திற்கு அப்பால் ஒன்றாய்க் கலந்தன.

மரக்கலமோ, படகோ ஒன்றும் தென்படவில்லை. ஒன்றிரண்டு பறவைகள் கடலிலிருந்து கரையை நோக்கிப் பறந்து வந்தன. அவ்வளவு தான்! சிறிது நேரம் அங்கே நின்று நாலாபுறமும் சுற்றிச் சுற்றிப் பார்த்துவிட்டு "சரி! புகைந்த மரக்கலத்துக்குப் போகலாம்!" என்றார் இளவரசர்.

இருவரும் வந்த வழியே திரும்பி நடக்கத் தொடங்கினார்கள்.

"பூங்குழலி! நீ எனக்குச் செய்த உதவியை என்றும் மறக்கமாட்டேன். ஆனால் இங்கே நாம் பிரிந்து விட வேண்டியதுதான்" என்றார் இளவரசர்.

பூங்குழலி மௌனமாயிருந்தாள். "நான் சொல்கிறது காதில் விழுந்ததா? அந்தப் புதைந்த கப்பலிலேயே நான் காத்திருக்கத் தீர்மானித்து விட்டேன். சேனாதிபதி முதலியவர்கள் எப்படியும் இந்த இடத்தைத் தேடிக் கொண்டு வந்து சேர்வார்கள். அவர்களுடன் கலந்தாலோசித்து மேலே செய்ய வேண்டியதைப் பற்றி முடிவு செய்வேன். ஆனால் உனக்கு இனி இங்கே வேலை இல்லை. உன் படகைத் தேடிப் பிடித்துப் போய்விடு. என் தந்தையைப் பற்றி நான் கூறியதை நினைவில் வைத்துக் கொள்."

பூங்குழலி தயங்கி நின்றாள் அங்கிருந்த மரம் ஒன்றின் மீது சாய்ந்தாள். அதன் தாழ்ந்த கிளை ஒன்றை அவள் பிடித்துக் கொண்டாள்.

"என்ன சமுத்திரகுமாரி? என்ன?"

"ஒன்றுமில்லை, இளவரசே! இங்கே தங்களிடம் விடை பெற்றுக் கொள்கிறேன், போய் வாருங்கள்!"

"கோபமா, பூங்குழலி!"

"கோபமா? தங்களிடம் கோபங்கொள்ள இந்தப் பேதைக்கு என்ன அதிகாரம்? அவ்வளவு அகம்பாவம் நான் அடைந்து விடவில்லை."

"பின்னர் ஏன் திடீரென்று இங்கே நின்று விட்டாய்?"

"கோபம் இல்லை, ஐயா! களைப்புத்தான்! நான் உறங்கி இரண்டு நாள் ஆகிறது. இங்கேயே சற்றுப் படுத்திருந்து விட்டு என் படகைத் தேடிக் கொண்டு போகிறேன்."

அது பௌர்ணமிக்கு மறுநாள். ஆகையால் அச்சமயம் கீழைக்கடலில் சந்திரன் உதயமாகிக் கொண்டிருந்தது. இரண்டொரு மங்கிய கிரணங்கள் பூங்குழலியின் முகத்திலும் விழுந்தன.

இளவரசர் அந்த முகத்தைப் பார்த்தார். அதில் குடிகொண்டிருந்த சோர்வையும் களைப்பையும் பார்த்தார். கண்கள் பஞ்சடைந்து இமைகள் தாமாக மூடிக் கொள்வதையும் பார்த்தார். சந்திரன் உதயமாகும்போது செந்தாமரை குவிதல் இயற்கைதான். ஆனால் பூங்குழலியின் முகத்தாமரை அப்போது குவிந்தது என்று மட்டும் சொல்வதற்கில்லை. அது வாடி வதங்கிச் சோர்ந்து போயிருந்தது.

"பெண்ணே! தூங்கி இரண்டு நாளாயிற்று என்றாயே? சாப்பிட்டு எத்தனை நாள் ஆயிற்று?" என்றார்..

"சாப்பிட்டும் இரண்டு நாளைக்கு மேல் ஆயிற்று தங்களுடன் இருந்த வரையில் பசியே தெரியவில்லை."

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## கரடி மனிதன்

(நேற்றைய தொடர்ச்சி...)

அப்போது குகையின் இருண்ட பகுதியிலிருந்து திடீரென்று பூதம் ஒன்று பாய்ந்து வந்தது. அதன் பயங்கரமான அலறலைக் கேட்டு சகோதரிகள் இருவரும் அஞ்சி நடுங்கினர்.

அவர்களைக் கண்ட பூதம், "உங்களை என்ன செய்கிறேன் பாருங்கள். இங்கு என்னை உளவு பார்க்கவா வந்துள்ளீர்கள்?" என்று கத்தியபடி தனது நீண்ட கைகளை நீட்டியது. இருவரும் பதறிப் போன நேரத்தில் அங்கே கரடி ஒன்று வந்தது.



பூதத்தின் கவனம் கரடி மேல் திரும்பியது. அப்போதுதான் இருவருக்கும் மூச்சே வந்தது. "அப்பாடா பிழைத்தோம்!' என்று எண்ணினர். கரடிக்கும் பூதத்திற்கும் கடும் சண்டை நடந்தது. இறுதியில் பூதம் கரடி[illegible] அடித்துக் கொ[illegible]பட்டது. கரடி சகோதரிகளின் அருகில் வந்தது.

""என்னைத் தெரியவில்லையா? நான் உங்கள் நண்பன். பனிக்காலம் முழுவதும் கணப்புக்காக உங்கள் [illegible] குரல் கேட்டு ஸ்நோ ஒயிட்டும், ரெட் ரோஸூம். அடையாளம் கண்டு கொண்டனர். அப்போது அங்கே எதிர்பாராத அதிசயம் நடந்தது.

கரடி உருமாறத் தொடங்கியது. மனித உரு பெற்றது. அரசகுமாரன் தோற்றத்தில் அலங்கார அணிமணிகளுடன் ஒரு இளைஞன் அங்கே காட்சியளித்தான். அவன் பேச ஆரம்பித்தான். "நான் ஒரு அரசகுமாரன். இந்தப் பூதத்தால் தான் நான் கரடி உருவம் பெற்றேன்.

பனிக்காலத்தில் நான் விறைத்துபோய் இறந்து போகாதபடி நீங்கள் தான் என்னை காப்பாற்றினீர்கள். உங்களுக்கு மிக்க நன்றி.

எனது செல்வங்களை எல்லாம் இந்த பூதம் அபகரித்துக் கொண்டு விட்டது. அதனை மீட்கவே இங்கு வந்தேன். அப்படி வரும் போது தான் உங்களைச் சந்திக்கின்றேன்," என்றான்.

அரசகுமாரன் செல்வங்கள் அனைத்தையும் எடுத்துக் கொண்டான். ஸ்நோ ஒயிட், ரெட் ரோஸ் இருவரையும் அழைத்துக் கொண்டு, தனது நாட்டிற்குச் சென்றான். ஸ்நோ ஒயிட்டை அவன் திருமணம் செய்து கொண்டான்.

இளையவள் ரெட் ரோஸைத் தனது தம்பிக்கு மணமுடித்து வைத்தான். அவர்கள் நால்வரும் நீண்ட காலம் மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வந்தனர்.

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைதியின் உண்மைச் சொரூபம் மனதில் இருந்து வெளிப்படும்போது அன்பின் உணர்வும் தானே வெளிப்படும். ~ யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தமிழ்ப் பொது வேட்பாளரா? மக்களின் கருத்தை அறியுங்கள்

ஜனாதிபதித் தேர்தலுக்கான ஏற்பாடுகள் நெருங்கியுள்ளன. இந்நிலையில் ஜனாதிபதித் தேர்தல் ஒத்திவைக்கப்படுமா? என்ற சந்தேகத்துக்கு இடமில்லை.

ஏனெனில் ஜனாதிபதித் தேர்தலை நடத்தியே ஆக வேண்டும் என்ற சட்டக்கட்டுப்பாடுகள் ஒரு புறம். மறுபுறம் ஜனாதிபதித் தேர்தலை நடத்தியே ஆக வேண்டும் என்பதில் தென்பகுதி அரசியல் கட்சிகள் அனைத்தும் உறுதியாக உள்ளன.

இங்கு ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைத்தால் என்ன? என்ற நினைப்பு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் ஏற்படலாமேயன்றி, மற்று அனைவரும் ஜனாதிபதித் தேர்தலை நடத்தியே ஆக வேண்டும் என்பதில் மிகவும் தெளிவாக உள்ளனர்.

இஃது ஒருபுறமிருக்க, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவை மொட்டுக்கட்சி ஆதரிக்க மாட்டாதென்பது தெரிய வருகிறது.

ஆம், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் மொட்டுக்கட்சி தனித்துப் போட்டியிடுவதையே விரும்புகிறது. அதிலும் பசில் ராஜபக்ஷவை ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்துவதற்கான சந்தர்ப்பங்களே அதிகம்.

ஆக, இப்போதைக்கு பசில் ராஜபக்ஷ, சஜித் பிரேமதாஸ, அநுரகுமார திஸாநாயக்க ஆகியோர் ஜனாதிபதி வேட்பாளர்கள் என்பது உறுதியாயிற்று.

இதை நாம் கூறும்போது, ரணில் விக்கிரமசிங்க...? என்று நீங்கள் கேட்கலாம்.

உங்களின் கேள்விக்கான பதிலை காலத்தால் மட்டுமே தரமுடியும்.

இஃது ஒருபுறமிருக்க, ஜனாதிபதித் தேர்தலின்போது தமிழ் மக்களின் நிலைப்பாடு என்ன? என்பதுதான் பலரதும் கேள்வி.

இங்குதான் ஒரு விடயத்தை நாம் கூறியாக வேண்டும். அதாவது எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகளைப் பெறவேண்டும் என்பதில் சிங்கள அரசியல் கட்சிகள் எவையும் முனைப்புக் காட்ட மாட்டா.

அதாவது, தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்று ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற வேண்டுமென்ற சிந்தனை மனதில் இருந்தாலும் அதனை வெளிப்படையாகத் தெரிவிக்க முடியாத சூழ்நிலையே உள்ளது.

ஆம், தமிழ் மக்களின் ஆதரவைக் கோரினால், அவ்வளவுதான். குறித்த ஜனாதிபதி வேட்பாளர் நாட்டைப் பிரிக்கப் போகின்றார். அவர் ஜனாதிபதியாக வந்தால், விடுதலைப் புலிகள் மீண்டும் தலைதூக்குவர் என்ற பிரசாரம் தென்பகுதி முழுவதையும் பற்றிப் பிடிக்கும்.

இதுவே கடந்த ஜனாதிபதித் தேர்தலில் நடந்ததென்பது அனைவரும் அறிந்தது. ஆக, ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் தமிழ் மக்களின் வாக்குகளைப் பெறுவதற்கோ அன்றி, தமிழ் அரசியல் தரப்புகளைச் சந்தித்துக் கதைப்பதற்கோ ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் எந்த சிங்கள அரசியல் கட்சியும் தயாரில்லை என்பதை அறுதியிட்டுக் கூறலாம்.

இவ்விடத்தில்தான் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த் தரப்புக்களின் நிலைப்பாடு என்ன என்ற விடயம் பேசுபடுபொருளாகிவிட; பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்த வேண்டும் என்ற கருத்து மேலெழுகிறது.

அதேநேரம் அதற்கு எதிர்வாதமும் பலமாக உள்ளது.

இங்குதான் பொதுவேட்பாளர் தொடர்பில் தமிழ் மக்களின் கருத்துக்களை, அவர்களின் அபிப்பிராயங்களைப் பெற்றுக் கொள்வது மிக மிக அவசியமாகிறது.

# தேர்தல்கள் பிற்போடப்பட்டதை எதிர்த்து போராட்டத்தை முன்னெடுத்த மகிந்த தேசப்பிரிய

(கொழும்பு)

மாநகர சபை மற்றும் உள்ளூராட்சி சபை தேர்தல்கள் பிற்போடப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து தேர்தல்கள் ஆணைக் குழுவின் முன்னாள் தலைவர் மகிந்த தேசப்பிரிய தனது வீட்டுக்கு முன்பாக போராட்டமொன்றை முன்னெடுத்துள்ளார்.

இதன் போது கருத்துத் தெரிவித்த அவர் "மக்கள் பிரதிநிதிகள் இன்றி அதிகார வர்க்க ஆட்சியின் கீழ் உள்ளூராட்சி மன்றங்களை நடத்துவது அடிப்படை உரிமைகளை மீறும் செயலாகும்.

உள்ளூராட்சி மன்றங்களை அதிகாரிகளின் கீழ் வைத்திருப்பது அடிப்படை உரிமை மீறல் என்று நீதிமன்றம் கூறியது. அவர்கள் இல்லாமல் இயங்கலாம் என்று சிலர் கூறுகிறார்கள்.

அப்படியானால் பாராளுமன்ற உறுப்பினர்கள் தேவையில்லை. ஜனாதிபதி, ஜனாதிபதியின் செயலாளர், பிரதம நீதியரசர், பாதுகாப்புப் படைத் தலைவர் ஆகியோர் மக்கள் பிரதிநிதிகள் இன்றி ஆட்சியமைக்க முடியும்" இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-5-6)

## போலி பேஸ்புக் கணக்குகளை நீக்குமாறு நாளாந்தம் 200 முறைப்பாடுகள்

(கொழும்பு)

பேஸ்புக் செயலியில் தங்களின் பெயரில் இயங்கும் போலி பேஸ்புக் கணக்குகளை நீக்கக் கோரி, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு நாளாந்தம் சுமார் 200 இற்கு மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைக்கப் பெறுவதாக அதன் பிரதிப் பணிப்பாளர் தர்ஷிகா குமாரி ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளில் பெண்களும் குழந்தைகளுமே பெரும்பான்மையான முறைப்பாடுகளுக்கு பலியாகி உள்ளனர்" என தர்ஷிகா குமாரி ஜயசிங்க சுட்டிக்காட்டியுள்ளார். (நி-5-6)

## வாக்காளர் பெயர் பட்டியல் மக்கள் பார்வைக்கு

(கொழும்பு)

2023 ஆம் ஆண்டுக்கான தேர்தல் வாக்காளர் பெயர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்ட பெயர்களைக் கொண்ட "A" பட்டியலும் 2024 ஆம் ஆண்டுக்கான தேர்தல் வாக்காளர் பெயர் பட்டியலில் புதிதாக சேர்க்கப்பட்டவர்களின் பெயர்களைக் கொண்ட "B" பட்டியலும் தற்போது மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

இந்த பெயர் பட்டியல் நேற்று முன்தினத்திலிருந்து மே மாதம் 6 ஆம் திகதி வரை மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. தேர்தல் வாக்காளர் பெயர் பட்டியல் மாவட்ட செயலகங்கள், பிரதேச செயலகங்கள், உள்ளூர் அதிகார சபைகள், கிராம உத்தியோகத்தர் அலுவலகங்கள் ஆகிய இடங்களில் வைக்கப்பட்டுள்ளது.

தேர்தல் வாக்காளர் பெயர் பட்டியலில் உள்ள பெயர்களை நீக்குவது, பெயர்களை புதிதாக சேர்ப்பது அல்லது பெயர்கள் தொடர்பில் வேறு சந்தேகங்கள் இருந்தால் சம்பந்தப்பட்ட வாக்காளரின் மாவட்ட தேர்தல் அலுவலகத்தில் தகவல் தெரிவிக்கவும்.

தேர்தல் ஆணைக் குழுவினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள (www.elections.gov.lk) என்ற இணையத்தளத்தின் மூலம் மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ள முடியும். (நி-5-6)

## போலி கடவுச்சீட்டு மூலம் மலேசியா செல்ல முயன்ற யாழை சேர்ந்தவர் கைது

(கொழும்பு)

போலி வெளிநாட்டு கடவுச்சீட்டை பயன்படுத்தி மலேசியா செல்ல முயன்ற இலங்கையர் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ். சண்டிலிப்பாய் பகுதியைச் சேர்ந்த 34 வயதுடைய இவர் நேற்று அதிகாலை மலேசியாவின் கோலாலம்பூர் நோக்கிச் செல்லவிருந்த நிலையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

நாட்டை விட்டு வெளியேற நீதிமன்றம் தடை உத்தரவு அமுல்படுத்தப்பட்ட நிலையில் இவர் போலி வெளிநாட்டு கடவுச் சீட்டைத் தயாரித்துள்ளார். [illegible] 2012 ஆம் ஆண்டு படகு மூலம் அவுஸ்திரேலியாவுக்கு தப்பிச் செல்ல முயன்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இவர் நாட்டை விட்டு வெளியேறுவதற்கு நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றம் தடைவிதித்து உத்தரவு பிறப்பித்திருந்தது.

மேலும் கைது செய்யப்பட்ட நபரை மேலதிக விசாரணைகளுக்காக கட்டுநாயக்க விமான நிலைய குற்றப்புலனாய்வு திணைக்கள மனித கடத்தல் விசாரணை மற்றும் கடல்சார் குற்றப்பிரிவு அதிகாரிகளிடம் ஒப்படைக்க குடிவரவு குடியகழ்வு திணைக்கள அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

## பண்டிகை காலங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்படும்

### தேசபந்து தென்னகோன் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ் - சிங்கள புத்தாண்டு கொண்டாட்டங்களின் போது அதிக பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது அவசியம் என பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் வலியுறுத்தியுள்ளார்.

பொலிஸ் பாதுகாப்புப் பிரிவில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், "உலகளவில் தீவிரவாத மற்றும் பயங்கரவாத தாக்குதல்கள் அடிக்கடி எதிர்பாராத விதமாக நிகழ்கின்றன. இது விழிப்புணர்வின் அவசியத்தை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

பொது அமைதியின்மையை தூண்டும் வகையில் அரசியல், மத மற்றும் கலாச்சார அம்சங்களின் மீது தாக்குதல் நடத்த சிலர் முயற்சிக்கின்றனர்.

தமிழ் - சிங்கள புத்தாண்டின் போது பாதுகாப்பிற்கு விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும். பாதுகாப்பு நிலைமைகள் விரைவாக மாறலாம்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் அளவில் இல்லாவிட்டாலும் ஏனைய சம்பவங்கள் நிகழலாம். தீவிரவாதம், பயங்கரவாதம் போன்ற சமூகப் பிரச்சினைகளுக்கு நாம் தீர்வு காண வேண்டும்." என சுட்டிக்காட்டியுள்ளார். (நி-5-6)

## பெரிய வெங்காய இறக்குமதி தொடர்பில் இந்தியா ஆராய்வு

(கொழும்பு)

இந்தியாவிலிருந்து இலங்கைக்கு பெரிய வெங்காயத்தை இறக்குமதி செய்வது தொடர்பில் ஆராய்வதற்காக அந்நாட்டின் பிரதிநிதி ஒருவர் இலங்கை வருகை தந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

பெரிய வெங்காயம் ஏற்றுமதிக்கான தடையை இந்தியா மேலும் நீட்டித்துள்ளதன் காரணமாக நாட்டில் இறக்குமதி செய்யப்படும் பெரிய வெங்காயத்தின் விலை அதிகரித்துள்ளது.


இந்நிலையில் நாட்டில் ஏற்பட்டுள்ள பெரிய வெங்காயப் பிரச்சினைக்கு தீர்வாக குறிப்பிட்ட அளவு பெரிய வெங்காயத்தை இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்வதற்காக அரசாங்கம் பல தடவைகள் இந்திய அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்நிலையிலேயே இலங்கைக்கு பெரிய வெங்காயத்தினை இறக்குமதி செய்வது குறித்து ஆலோசிக்க இந்தியாவிலிருந்து பிரதிநிதி ஒருவர் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

இதேவேளை பாகிஸ்தான் இலங்கைக்கு பெரிய வெங்காய ஏற்றுமதியை நிறுத்தியுள்ள நிலையில் தற்பொழுது துருக்கி மற்றும் சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பெரிய வெங்காயம் சந்தையில் ஏராளமாக காணப்படுகிறது.

அதன்படி துருக்கியில் இருந்து இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ பெரிய வெங்காயம் 420 ரூபாவிற்கும் சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ பெரிய வெங்காயம் 320 முதல் 350 ரூபா வரையிலும் சந்தையில் விற்பனை செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும்
## ஆங்கிலேயர் ஆட்சிக் கால முற்பகுதி (1796–1832)

பகுதி IV

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

06

சட்டமியற்றல், நிர்வாகம், நீதி அதிகாரங்கள் யாவும் அவனது கைகளிலேயே குவிந்திருந்தன. நாட்டின் சகல நிலபுலங்களுக்கும் அதிபதியாக விளங்கினான். அவனே வரிகளையும் மக்கள் செய்ய வேண்டிய சேவைகளையும் கட்டளையிட்டான். குடிகளின் உயிரும் அவனது மரணமும் அவனது ஆணைக்குக் கீழ்ப் பட்டேயிருந்தன.

அவனே நாட்டின் பிரதானிகளை நியமித்தும், பட்டம் பதவிகளை வழங்கியும் வந்தான் சகல கருமங்களிலும், நாட்டின் சகல சக்திகளுக்கும் மேம்பட்ட தலைவனாக விளங்கினலும் அவன், தேசத்தில் நிலவிய மரபுகளுக்கும் முன்னோரின் பழக்க வழக்கங்களுக்கும் மதிப்புக் கொடுத்தே ஆட்சியை நடாத்த வேண்டிய கட்டாய நிலைக்குள்ளானன்.

நாட்டு வழக்கத்தை மீறி எச்செயலையாவது புரிந்தால் தன் பிரஜைகளின் பணிவையும் மரியாதையையும் இழப்பதுமன்றி, எந்நேரமும் அச்சத்துடனும் பாதுகாப்புடனும் வாழ நேரிடும் என்ற எண்ணம் அவனை நன் முறையில் ஆட்சி செய்ய வழிகாட்டிற்று.

நாட்டின் பழக்க வழக்கங்களுக்குட்பட்டு நடப்பதற்குதவி செய்ய அவனுக்கு ஓர் அரசாங்க சபை துணை புரிந்தது. எனவே அவன் சட்டதிட்டங்களைச் செயற்படுத்த முன் தன் பிரதான அதிகாரிகளினதும் சமயக் குரவர்களினதும் ஆய்வுரையைக் கேட்டு சம்பிரதாய முறைப்படியே ஒழுகினான்.

### அதிகாரங்கள் மற்றும் திசாவைகள்

அரசனின் தலையாய உத்தியோகத்தர்கள் "அதிகாரிகள்" அல்லது "மஹா நிலமே" எனப் பெயர் பெற்று விளங்கிய இருவராவர். இப்பதவியை வகித்த அலுவலாளர் இருவரும் தத்தம் பிரதேசங்களில் சம பதமுடையவர்கள். ஆனால் அரச சபையில் ஒருவன் மற்றவனிலும் பார்க்க முதன்மை பெற்றான். அவர்கள் ஓராண்டுக்கென்றே நியமிக்கப்பெற்றனர். அவர்களது சேவைக் காலத்தின் நீடிப்பு, அரசனின் தயவிலேயே தங்கி நின்றது. அதிகாரி ஒவ்வொருவரும் அனுபவித்த உரிமைகளுக்கும், வருவாய்களுக்கும் கைமாறாக ஆண்டு தோறும் 500 வெள்ளிகளை அரசனின் இறையகத்துக்கு **இணைத்தனர்.**

ஒவ்வொரு அதிகாரியும் இராச்சியத்தின் அரைப்பாகத்தின் மேல் பொது அதிகாரங்களைக் கொண்டு விளங்கினான். இதற்கென கண்டி இராச்சியம் இரு கூறுகளாகப் பகுக்கப்பட்டது. முதலாம் அதிகாரியின் ஆணைக்குட்பட்ட பிரதேசங்களாவன ஏழு கோறளை, ஊவா, மாத்தளை, வலப்பான, வெல்லச, விந்தனை, நுவரக்கலாவிய, தமன்கடுவை, ஹரிஸ்பத்து, தும்பறை, ஹேவாஹெற்ற எனும் மாநிலங்களாகும். இம் மாநிலங்களில் அவன் "பள்ளே கம்பஹே அதிகாரி" (கீழ் ஐந்து மாநிலங்களின் அதிகாரி) என அழைக்கப்பட்டான்.

நான்கு கோறளை, மூன்று கோறளை, சப்பிரகமுவா, உடப்பலாத்த, உடுநுவர, யட்டிநுவர, தும்பனே, கொத்மலை, புலத்கம எனும் பிரிவுகள் இரண்டாம் அதிகாரியின் ஆணைக்குக் கீழ்ப்பட்டவை. இவன் 'உட கம்பஹே அதிகாரி' என அழைக்கப்பட்டான்.

குலம், பதவி, கௌரவம் என்பவற்றில் அவர்களுக்கு ஈடிணையானவர்கள் நாட்டில் வேறிலர். நாட்டின் பிரதான கருமங்களை நிர்வகித்தல், வைபவங்களை நடாத்துதல், ஆலயங்களைப் பழுது பார்த்தல், யானை பிடித்தல், பொது வேலைகளை மேற்பார்வை செய்தல் என்பன அவர்களினது பிரதான கடமைகளாகும்.

இவர்களுக்குக் கீழ்ப்பட்டவர்கள் திசாவைகள் எனும் திசாவனிகளின் ஆள்பதிகளும் 'ரட்டே ரால' எனும் இரட்டைகளின் தலைமைக்காரருமாவர். இப்பிரிவுகள் ஏற்கனவே விபரிக்கப்பட்டுள்ளன. இறைகளைச் சேகரித்தல், இராசக்காரியம், சரீர சேவை முதலானவற்றைப் பெறல், பொதுக் கட்டடங்கள், தெருக்கள் அமைத்தல், பழுது பார்த்தல், அவனது மாநிலத்துக் கூடாக அரசன் பிரயாணம் செய்யும்பொழுது தங்கு நிலையங்களை அமைத்தல் என்பவை திசாவைகளின் பிரதான கடமைகளாகும். அதிகாரிகள், ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பிரதான திசாவைகளாகவும் இருந்தனர்.

திசாவைகள் ஒவ்வொருவருக்கும் கீழ் மாகாண பரிபாலனத்துக்கென கோறளை, அத்துக் கோறளை, விதான, லியனறால எனும் தலைமைக்காரர்கள் பலர் இருந்தனர். இராணுவக் கடமைகளை மேற்பார்வை செய்வதற்கு படிமுறையில் முதலியார் (அல்லது மொஹட்டால), முகாந்திரம், ஆராச்சி, கண்காணிகள் என்போர் பொறுப்பாயிருந்தனர். இந்த உதவி உத்தியோகத்தர்களின் அதிகாரங்கள் மட்டுப்படுத்தப்பட்டவை. இவர்களைக் கட்டுப்படுத்திய பிரதானிகளே உண்மையான அதிகாரமும் செல்வாக்கும் உடையவர்கள்.

### இலாக்காக்கள் :

மாகாணப் பரிபாலனத்துக்குப் பொறுப்பாயிருந்த இம்மாநில அதிகாரிகளைத் தவிர பல இலாக்காக்களுக்குத் தலைவர்களாக அதிகாரிகள் பலர் இருந்தனர். அவர்கள் நாட்டின் பல மாகாணங்களின் கிராமங்களில் வாழ்ந்த பல்வேறுபட்ட சாதியினர் அரசாங்கத்துக்குப் புரியவேண்டிய கட்டாய சேவைகள் இறுக்கப்படுவதைக் கண்காணித்தனர்.

இவ்விலாக்காக்கள் "லேக்கம்கள்" அல்லது செயலாளர்களின் பொறுப்பிலிருந்தன. உதாரணமாக, மடுவே லேக்கம் என்பவன் அரசாங்கத்துக்கு இராணுவச் சேவைசெய்யக் கடமைப்பட்ட சாதியினரை மேற்பார்வை செய்தான். அவன் தனது அதிகாரத்தை ஒவ்வொரு மாகாணத்தினதும் முகாந்திரம், ஆராச்சி, கண்காணி என்பவர்களின் மூலம் செலுத்தினான்.

செயலாளர் பகுதியின் தலைவன் மகா லேக்கம் எனவும், யானைப் பகுதித் தலைவன் கஜநாயக்க லேக்கம் எனவும், துப்பாக்கிப் படைத் தலைவன் கொடித்துவக்கு லேக்கம் எனவும், அரசதுரதுவர் தலைவன் நாணயக்கார லேக்கம் எனவும் அழைக்கப்பட்டனர்.

### கண்டி இராச்சியத்தின் நீதி பரிபாலனம்

கண்டி இராச்சியத்தில் நிர்வாக அதிகாரிகளே நீதி பரிபாலனத்துக்கும் பொறுப்பாயிருந்தனர். அரசன் நாட்டில் சட்டங்களின் ஊற்றாகவும், இறுதி நீதியதிகாரத்தின் இருப்பிடமாகவும் விளங்கினான். அரசனுடைய சித்தத்தைத் தவிர வேறு சட்டங்கள் ஒன்றுமில்லை. அவனது வாயினின்று பிறக்கும் ஒவ்வொரு சொல்லும் மாற்றமுடியாத ஒரு சட்டமாகும்.

எனினும், பழைய காலத்தினது மரபுகளும் பழக்க வழக்கங்களும் சட்டத்தைப் போன்று அங்கு கடைப்பிடிக்கப்பட்டன எனக் கூறுகின்றார் நொக்ஸ். அரசன் தனது நீதியதிகாரத்தை நேர்முகமாக வழக்குகளை விசாரணை செய்யவும், அதிகாரிகளின் தீர்ப்புக்களினின்று அவனது முன்னிலைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட முறையீடுகளுக்குத் தீர்ப்புக் கூறவும் உபயோகித்தான்.

பிரதானிகள் அல்லது அரண்மனை உத்தியோகத்தர்களிடையே எழும் தகராறுகள், விகாரைகள் சம்பந்தமாக பிக்குகளிடையே எழும் பிணக்குகள், தேசத் துரோகம், சதி, புரட்சி, கொலை, தேவதுரோகம் எனும் பாரிய குற்றங்களை அரசன் தானே விசாரணை செய்து தீர்ப்புக் கூறினன். நாட்டின் ஒவ்வொரு பிரஜையும் பிரதானிகளின் தீர்ப்புக்களினின்று அரசனின் நீதிமன்றத்துக்கு முறையீடு செய்ய உரிமை பெற்றிருந்தனர். இவற்றை அரசன் தானே விசாரணை செய்தான்.

அன்றேல், அவனது மாமன்றத்தின் விசாரணைக்கு அனுப்பி அதன் அறிக்கையைப் பரிசீலனை செய்து தீர்ப்பளித்தான். அரசன் ஒருவன் மாத்திரமே கொலைத் தண்டனை விதிக்க உரிமையுடையவன்.

### மகா நடுவ என்னும் நீதி மன்றம்:

அரசனின் தனிப்பட்ட நீதியதிகாரத்துக்கு அடுத்ததாக மாமன்றம் அல்லது "மகா நடுவ" என்ற நீதிமன்றமே அதிமுக்கிய நீதிமன்றமாகும். அதிகாரி, திசாவை, லேக்கம், முகாந்திரம் என்னும் பதவியுடைய சகல உத்தியோகத்தரும் அதன் உறுப்பினர்கள். இம்மன்றம் தேவைக்கேற்ப அதிகாரி தலைமையில் அரண்மனைக்கருகாமையில் ஒன்று கூடும். இம்மன்றம் குடியியற், பாதக வழக்குகள் யாவற்றையும் விசாரித் விளங்கித் தீர்ப்புக்கூற அதிகாரம் பெற்றிருந்தது. விசாரணைகள் வாய் மூலம் நடைபெற்றன. பதிவுகள் ஒன்றும் வைக்கப்பட்டதில்லை.

மாமன்றத்தின் உறுப்பினர்கள் தத்தம் மாகாணங்களில் அல்லது தமது அதிகாரத்துக்குக் கீழ்ப்பட்ட விடயங்களில் நீதி வழங்க அதிகாரம் பெற்றிருந்தனர். அதிகாரிகள், தம் பரிபாலனத்தின் கீழிருந்த மாகாணங்களில் கொலைக் குற்றம் ஒன்றைத் தவிர சகல வழக்குகளையும் விளங்கித் தீர்ப்புக் கூற அதிகாரம் பெற்றவர்கள் ஆவர்.

மக்கள், அதிகாரிகளின் தீர்ப்பினின்று மகாநடுவவுக்கும் அரசனுக்கும் முறையீடு செய்து விமோசனம் பெற உரிமையிருந்தது. திசாவைகள், தமது ஆணைக்குட்பட்ட மாகாணங்களின் நீதி நிர்வாகத்துக்குப் பொறுப்பாயிருந்தனர்.

அவர்கள் வழக்குகளைத் தாமாகவும், அன்றேல் கோறளைகள் மூலம் தமது இல்ல முன்றில்களில் விளங்கித் தீர்ப்பளித்தனர். இதே போன்று, லேக்கம், றட்டே றால என்றவர்களும் மட்டுப்படுத்தப்பட்ட நீதியதிகாரத்தைப் பெற்றிருந்தனர்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அனைத்து...

இரத்த வங்கியில் அனைத்து இரத்த வகைகளுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

வெப்ப நிலை அதிகரிப்புக் காரணமாக இரத்த வங்கியிலும் இரத்ததான முகாம்களிலும் குருதிக்கொடை செய்வோரின் எண்ணிக்கை சடுதியாக வீழ்ச்சியடைந்துள்ளது.

இந்நிலைமை அனைத்துப் பிரதேசங்களிலும் காணப்படுவதனால் மற்றைய இரத்த வங்கிகளிலும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் ஏனைய இரத்த வங்கிகளிடமிருந்து குருதியைப் பெற முடியாமலிருக்கிறது.

இந்நிலை காரணமாக நோயாளர்களுக்கு தேவையான குருதியை வழங்குவதில் இடர்பாடுகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

தினமும் 30-40 பைந்குருதி தேவைப்படுகிறது. இவற்றை கருத்திற் கொண்டு பொதுமக்களை குருதிக் கொடையளிக்க முன்வருமாறு கேட்டுக் கொள்கின்றேன். குருதிக் கொடையாளர்களுக்கான முழுமையான வெப்பச் சூழலை எதிர்கொள்வதற்கான மருத்துவ ஆலோசனைகள் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7,10)

## பெரமுனவை...

தெரிவித்துள்ளார்.

கட்சியை வலுப்படுத்துவதற்கான முதற்கட்ட நடவடிக்கையாக வீடுகளுக்குச் சென்று விழிப்புணர்வு ஏற்படுத்தவுள்ளதாகவும் நாமல் ராஜபக்ஷ எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

இதேவேளை பொதுஜன பெரமுனவின் அரசியல் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்ட 04 விடயங்களை நாமல் ராஜபக்ஷ எக்ஸ் தளத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

அனைத்து மாவட்டங்களிலும் பெண்கள் உட்பட மாவட்டத் தேர்தல் தொகுதி அமைப்பாளர்களை நியமித்தல், வெற்றிகரமான மே தினப் பேரணியை நடத்தல், மே தினத்திற்குப் பின்னர் மாவட்ட மற்றும் வெளிப்புற கலந்துரையாடல்களில் கவனம் செலுத்தல், அரசியலமைப்பு விதிமீறல்களை கண்காணிக்கும் ஒழுங்குமுறைக் குழுவைச் செயற்படுத்தல் என்றும் அவர் பதிவிட்டுள்ளார்.

இதேவேளை, கடந்த 2022ஆம் ஆண்டு நாட்டில் ஏற்பட்ட அரசியல் புரட்சியால் பொதுஜன பெரமுன கடுமையான பின்னடைவை சந்தித்திருந்தாகவும் நாமல் மேலும் தெரிவித்துள்ளார்.

தமது மக்கள் பலத்தை நிரூபிக்கும் வகையில் பிரமாண்டமான மே தினக் கூட்டத்தை இம்முறை நடத்தவும் இந்த சந்திப்பில் ஆலோசிக்கப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளார். (ம-7,10)

## யாழில்...

டுள்ளன.

வீட்டின் முன் நிறுத்தப்பட்டிருந்த கண்ணாடிகள் நொருக்கப்பட்டதுடன், மோட்டார் சைக்கிளொன்றும் எரியூட்டப்பட்டது.

சம்பவம் தொடர்பாக கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

தனிப்பட்ட முரண்பாடே தாக்குதலுக்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ம-7,10)

## வாகன...

இருப்பதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

நாட்டின் தேவைகளை உணர்ந்து படிப்படியாக இந்த வர்த்தகத்தை திறக்க தயாராக இருப்பதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

ஊடகங்களிடம் நேற்று கருத்துத் தெரிவிக்கும்போதே இவ்வாறு தெரிவித்தார். (ம-7,10)

## இலங்கையின்...

பூர்த்தி செய்வதற்கும் இந்தியா உறுதி பூண்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து உரையாற்றும்போதே, அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையின் நம்பிக்கைக்குரிய மற்றும் எப்போதும் சார்ந்திருக்கக்கூடிய நண்பராக இந்தியா தொடர்ந்தும் திகழும் என சந்தோஷ் ஜா தெரிவித்துள்ளார்.

அத்துடன், இரண்டு நாடுகளுக்கிடையிலான இருதரப்பு உறவு விரிவடைந்து மற்றும் பரவலடைந்து வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

இதற்கமைய, பொருளாதாரம், வர்த்தகம், முதலீடு, கல்வி, கலாசாரம் உள்ளிட்ட துறைகளில் இரண்டு நாடுகளுக்கிடையிலான உறவுகள் மேலும் மேம்படுத்தப்படவுள்ளதாக சந்தோஷ் ஜா மேலும் தெரிவித்துள்ளார். (ம-7,10)

## தேர்தலைப்...

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைவதற்கு பலர் விருப்பம் தெரிவித்துள்ளனர்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் மற்றும் மாகாணசபை தேர்தல் போன்றவற்றை பிற்போட்டதைப் போன்று ஜனாதிபதித் தேர்தலையும் பொதுத்தேர்தலையும் பிற்போடுவதற்கு அரசாங்கம் முயற்சிக்கின்றது.

அவ்வாறு முயற்சிப்பார்களாயின் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஏற்பட்ட நிலை தற்போதைய ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கத்திற்கு ஏற்படும்.

ஐக்கிய மக்கள் சக்தி தேர்தலை இலக்கு வைத்து எந்தவொரு வேலைத் திட்டங்களையும் மேற்கொள்ளவில்லை.

எதிர்த்தரப்பு என்ற ரீதியில் நாட்டின் நலன்கள் தொடர்பாக சிந்தித்தே நாம் அனைத்து வேலைத்திட்டங்களையும் முன்னெடுத்து வருகின்றோம்.

அதேபோல் ஐக்கிய மக்கள் சக்தியின் ஆட்சியில் இந்த நாட்டில் மக்கள் நலன் சார்ந்த பல வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு நாம் எதிர்பார்த்துள்ளோம்.


எமது தலைவர் சஜித் பிரேமதாஸவின் கொள்கைத் திட்டங்களையே தற்போதைய அரசாங்கம் செயற்படுத்தி வருகின்றது" என பாராளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி மேலும் தெரிவித்துள்ளார். (ம-7,10)

## இலங்கை...

மேற்கொள்ளத் தவறியுள்ளதாக சர்வதேச மன்னிப்புச் சபை குறிப்பிட்டுள்ளது.

சட்டவிரோத பலவந்தப் பிரயோகத்திற்கு காரணமான அதிகாரிகளை நேரடி விசாரணைக்கு உட்படுத்தி சட்டத்தின் முன் நிறுத்தும் வரை இலங்கை அரசாங்கத்துடனான ஒத்துழைப்பை அவசரமாக மீளாய்வு செய்யுமாறு சர்வதேச மன்னிப்புச் சபை, சர்வதேச சமூகத்திடமும் கோரிக்கை விடுத்துள்ளது. (ம-7,10)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127








































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் மருதனார்மடம் சபாபதிப்பிள்ளை வீதியில் வாழ்வகத்திற்கு முன்பாக 06 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

## நிலப்பரப்பு

- 18 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நன்னீர் ஊற்று சூழல்.
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி.
- மருதனார்மடம் கலைக் கல்லூரிக்கு அருகாமையில் அமைந்துள்ளது.
- ஒரு பரப்பின் விலை 35 லட்சம்.
- தரகர் தேவையில்லை.
- பார்வையிடும் நேரம் : காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை

(420)

தொடர்புகளுக்கு : ஜெயம்

**077 814 7389**
**077 986 5457**



## வங்கி மீதி வசதிகள் மற்றும் விசா ஆலோசனை

சகல நாடுகளுக்குமான விசா ஆலோசனை மற்றும் வங்கி மீதி (Show Money) வசதிகள்

தொடர்புகளுக்கு: (395)

**074 17 37 684**



## இணைந்த கணிதம்

A/L 2024, A/L 2025, Repeat ஆகிய வகுப்புகளுக்கு குழுவாகவோ, தனியாகவோ அனுபவம் மிக்க ஆசிரியரால் கற்பிக்கப்படும்.

தொடர்பு : (410)

**077 711 1671**



## வாகனம் விற்பனைக்கு

Pulsar - 135 ரக மோட்டார் சைக்கிள் (பதிவு எண் BAI -XXXX 2013) நல்ல நிலையில் மானிப்பாய் பகுதியில் விற்பனைக்குண்டு.

(416)

**077 589 0043**



## 2024 ஆம் ஆண்டுக்கான புதிய பிரிவு ஆரம்பம்

முன்பள்ளி தொடக்கம் தரம் 03 வரையான மாணவர்களுக்கு புதிய பிரிவு ஆரம்பம் தனிப்பட்ட ரீதியில் வீடுகளில் வந்தும் கற்பிக்கப்படும்.

(418)

**074 179 3394**



## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS
(C-0109)

எமது கிளைகள்
- கிளிநொச்சி
- சுன்னாகம்
- சாவகச்சேரி
- மானிப்பாய்
- நெல்லியடி
- பருத்தித்துறை
- திருகோணமலை
- வல்வெட்டித்துறை
- கோப்பாய்
- புத்தூர்
- பண்டத்தரிப்பு
- சங்கானை
- கொழும்பு

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com



## V2 VISA SERVICES
கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
- கனடா PASSPORT APPOINMENTS

விமான பயணச்சீட்டுக்கள்
- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-0109)


## குடியியல் நடபடிமுறைக் கோவையின் பிரிவு 16 இன் கீழான அறிவித்தல் பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில்

1. முருகேசு ரவீந்திரராசா,
2. பெண் நாகரத்தினம்,

கிளானை, அல்வாய் வடக்கு, அல்வாய்.

வழக்காளிகள்

வழக்கு இல : நானாவிதம் /1668/ 2024

எதிர்

1. மாணிக்கம் சண்முகராசா, தலைவர், அல்வாய் வடக்கு ஸ்ரீ ஞானவைரவர் ஆலய பரிபாலன சபை.
2. சிதம்பரப்பிள்ளை சிவபாதம், செயலாளர், அல்வாய் வடக்கு ஸ்ரீ ஞானவைரவர் ஆலய பரிபாலன சபை.
3. ஆறுமுகம் சோதிலிங்கம், பொருளாளர், அல்வாய் வடக்கு ஸ்ரீ ஞானவைரவர் ஆலய பரிபாலன சபை. வெள்ளிவிழுந்தான் கோவிலடி, அல்வாய் வடக்கு, அல்வாய்.

எதிராளிகள்

மேற்குறிப்பிடப்பட்ட வழக்கானது மேலே பெயர் குறிக்கப்பட்ட வழக்காளிகளினால் மேற்குறிப்பிடப்பட்ட எதிராளிகளுக்கு எதிராக பின்வரும் நிவாரணங்களைக் கோரித் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

I. குறித்த அல்வாய் வடக்கு ஸ்ரீ ஞானவைரவர் ஆலயப் பரிபாலனசபையானது கூட்டிணைக்கப்படாத ஒரு அமைப்பாகையால் குடியியல் நடபடிமுறைக்கோவையின் பிரிவு 16 இன் கீழ் அறிவித்தல் வழங்கவும் இவ்வழக்கினை எதிராளிகளுக்கெதிராக கொண்டு நடாத்த அனுமதி வழங்கியும் கட்டளை ஆக்குமாறும்.

II. பரம்பரை உரித்தின் அடிப்படையிலும், மற்றும்/அல்லது யாப்பின் அடிப்படையிலும் அல்வாய் வடக்கு ஸ்ரீ ஞானவைரவர் ஆலயத்தினுடைய "மணவாளக்கோலம்" என்ற விசேட நிகழ்வினை வருடாந்தம் நடாத்துவதற்கு வழக்காளிகளே உரித்தானவர்கள் என்ற பிரகடனம் வழங்கும் கட்டளையும் தீர்ப்பும்.

III. எதிராளிகள் மற்றும்/அல்லது அவர்களது முகவர்கள் மற்றும்/அல்லது ஏவலாட்கள் மற்றும்/அல்லது தங்குனர்கள். வழக்காளிகள் அல்வாய் வடக்கு ஸ்ரீ ஞானவைரவர் ஆலயத்தினுடைய "மணவாளக்கோலம்" என்ற விசேட நிகழ்வினை வருடாந்தம் செய்வதனைத் தடுக்கக்கூடாது என்ற நிரந்தரத் தடைக்கட்டளை வழங்குமாறும்.

IV. இவ்வழக்கு விசாரிக்கப்பட்டு கௌரவ மன்றினால் தீர்ப்பு வழங்கப்படும் வரை எதிராளிகள் மற்றும்/அல்லது அவர்களது முகவர்கள் மற்றும்/அல்லது ஏவலாட்கள் மற்றும்/அல்லது தங்குனர்கள். வழக்காளிகள் அல்வாய் வடக்கு ஸ்ரீ ஞானவைரவர் ஆலயத்தினுடைய "மணவாளக்கோலம்" என்ற விசேட நிகழ்வினை வருடாந்தம் செய்வதனைத் தடுக்கக்கூடாது என்ற இடைக்காலத் தடைக்கட்டளை வழங்குமாறும்.

மேலும் கௌரவ பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம் 15.03.2024ஆம் திகதிய கட்டளையின் மூலம் இந்த வழக்குத் தொடர்பான அறிவித்தலை பிராதில் கோரப்பட்டிருந்தவாறு பொது விளம்பரத்தின் ஊடாக வழங்குமாறு பணித்துள்ளது.

ஆதலால், வழக்காளிகள் மேற்குறித்த எதிராளிகளுக்கு எதிராக வழக்குச் செலவு உட்பட மேற்குறிப்பிட்ட நிவாரணங்களைக் கோரி வழக்குத் தாக்கல் செய்துள்ளார் என்று அறியத்தரப்படுகின்றது.

இவ்வழக்கு 2024.05.31 ஆம் திகதியன்று திறந்த நீதிமன்றத்தில் அழைக்கப்படும்.

2024 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 27ஆம் திகதி

நீதிமன்றக் கட்டளைப்படி,
பதிவாளர்.
பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம்
பருத்தித்துறை

(417)


## Techna Technical institute

Smart thinking leads to innovate

A/L தொழினுட்பப்பிரிவு

A/L 2024 DAY CLASS ஆரம்பம்

17.04.2024 புதன்கிழமை, மாலை 3.30 மணிக்கு

| | |
|---|---|
| உயிர்முறைமைகள் தொழினுட்பவியல் | - M.விஷ்ணு, P.நிறோஜனன் |
| பொறியியல் தொழினுட்பவியல் | - S.மயூரதன் |
| தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம் | - S.சக்தி |
| தகவல் தொடர்பாடல் தொழினுட்பம் (ICT) | - T.லவன் |
| விவசாய விஞ்ஞானம் | - S.சஜீபன் |
| கணிதம் 07 | - T.சசிகரன் |
| புவியியல் | - S.P.கரன் |

A/L 2025, 2024 பிரிவுகள் நடைபெறுகின்றன.

2025 பிரிவினருக்கான BSTவகுப்புக்கள் இலவசமாக நடைபெறுகின்றது.

வீரசிங்கம் மண்டபம், 3ஆம் மாடி, யாழ்ப்பாணம்.

(405)

**077 170 3549**



## Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1 Kg வெள்ளை சீனி | - 264/= | |
| 1 Kg Prima கோதுமை | - 187/= | |
| 1 Kg அரிசி மா | - 199/= | |
| 1 Kg றவை | - 285/= | |
| 1 Kg சிவப்பு பருப்பு | - 285/= | |
| 1 Kg சம்பா | - 230/= | |
| 180g Supiri மீன்ரின் | - 490/= | ~~650/=~~ |
| 1Kg Lanka கட்டி உப்பு | - 80/= | ~~115/=~~ |
| 450g நெஸ்டமோல்ட் | - 749/= | ~~780/=~~ |
| 750ml New VSP நல்லெண்ணை | - 1450/= | ~~1550/=~~ |
| 01 Baby Soap | - 115/= | ~~145/=~~ |




தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு எமது Facebook:- happy basket.lk இனை நாடவும்

(422)

பலாலி வீதி, உரும்பிராய் சந்தி.

Happy Supermarket
0777 8080 30



## சிறிராம் ஜீவல்லர்ஸ்



- யாழ் நகரில் தங்க நகை வியாபாரத்தில் 37 வருட அனுபவம் வாய்ந்த நாம் எதிர்வரும் சித்திரை வருடப்பிறப்பை முன்னிட்டு தங்க ஆபரணங்களுக்கான மாபெரும் விலைத் தள்ளுபடியினை வழங்கவுள்ளோம்.
- 22 கரட் ஆபரணங்களுக்கு செய்கூலி, சேதாரமின்றிய விலையில் வழங்கப்படும்.
- அனைத்து விதமான தங்க ஆபரணங்களையும் 16.04.2024 ஆம் திகதி வரையில் விசேட விலைக்கழிவில் வழங்கப்படும்.
- அனைத்து ஆபரணங்களுக்கும் தரத்தை உறுதி செய்து தரச்சான்றும் வழங்கப்படும்.

இல.158, 193 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

077 165 1729, 077 773 0567
021 222 8334

(C-0106)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிரவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.04.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.